
කෘෂිකර්ම සහ වැවිලි කර්මාන්ත අමාත්‍යාංශය
கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture and Plantation Industries

# 2023

## උතුරට කප්රුක

### උතුරු පොල් ත්‍රිකෝණය



## පොල් වගාකිරීමේ මණ්ඩලය
தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை
Coconut Cultivation Board

# වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
**Annual Report**

www.coconutsrilanka.lk

coconut App

# வருடாந்த அறிக்கை

# 2023

## குறிக்கோள்கள்

- பாரம்பரிய தென்னைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் பகுதிகளிலிருந்து விலகி வடமாகாணத்தை மையமாகக் கொண்டு தென்னைப் பயிர்ச் செய்கையை விஸ்தரித்தல்.
- பாரம்பரிய விஸ்தரிப்புச் சேவைக்குப் பதிலாக தென்னைத் துறையுடன் தொடர்புடைய அனைத்து பங்குதாரர்களையும் ஒன்றிணைத்து பல அணுகல் விஸ்தரிப்பு முறையியல் மூலம் விஸ்தரிப்புச் சேவையை வலுப்படுத்துதல்.
- விஸ்தரிப்புச் சேவையை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம் விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ள விஸ்தரிப்புச் சேவையை வழங்குதல்.
- தென்னை நிலங்களுக்கு சேதன மற்றும் இரசாயன உரங்களை இடுவதன் மூலம் ஊட்டச்சத்து குறைபாடுகளை குறைத்து சிறந்த விளைச்சலைப் பெற தென்னை விவசாயிகளுக்கு வழிகாட்டுதல்.
- தென்னை நிலங்களில் மண் ஈரப்பதத்தை பாதுகாக்கும் முறைகள் மற்றும் நீர் வழங்கல் முறைமைகள் மூலம் தேங்காய் விளைச்சலை மேம்படுத்துதல்.
- தென்னைப் பயிர்ச் செய்கை மற்றும் விளைச்சலை சேதப்படுத்தும் நோய்கள் மற்றும் பூச்சிகளின் தாக்கங்களைக் குறைத்து அதன் மூலம் விளைச்சலை அதிகரிக்கச் செய்தல்.
- தென்னை நிலங்களுக்கு ஏற்ற ஊடுபயிர் மற்றும் கால்நடை வளர்ப்பை அறிமுகப்படுத்தி தென்னை நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.
- தென்னைப் பயிர்ச் செய்கையின் உற்பத்தித்திறனை திறம்பட அதிகரிக்க விவசாயிகளுக்கு பயிராக்கவியல் நடைமுறைகள் பற்றிய அறிவை வழங்குதல்.
- கப்ருக்க நகர உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் வணிக வாய்ப்புகளை உருவாக்கவும் உதவும் நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துதல்.
- இயந்திரமயமாக்கல் மூலம் தென்னை நில உற்பத்தியை அதிகப்படுத்துதல்.

## இலக்குகள்

- ஒவ்வொரு தென்னை விவசாயிக்கும் தென்னைப் பயிர்ச் செய்கைக்கான தொழில்நுட்ப அறிவினை வழங்கி திறன்களை வளர்த்தல்.
- கேள்வியை (தேவையை) அடிப்படையாகக் கொண்ட விஸ்தரிப்பு சேவைகளைப் பேணிச் செல்லல் மற்றும் உயர்தர உள்ளீடுகளை வழங்குதல்.
- இலங்கையில் நிலைபேறான தென்னை பயிர்ச் செய்கையைத் தாபித்தல்.
- தென்னை நிலத்திற்கு ஏற்ற ஊடு பயிர்களை பயிரிடுவதன் மூலம் தென்னை நிலத்தின் பயன்பாட்டை அதிகப்படுத்துதல்.
- உள்நாட்டு நுகர்வு, தென்னைசார் உற்பத்திகள் மற்றும் வெளிநாட்டு சந்தைக்குத் தேவையான தேங்காயை நாட்டில் உற்பத்தி செய்தல்.

# அறிமுகம்

தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் இலக்கம் 02 வது பிரிவின் கீழ் தீவில் தென்னைப் பயிர்ச்செய்கையின் அபிவிருத்தியினை நோக்காக் கொண்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் 1972 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினால் நிறுவப்பட்டது.

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ந் திகதி தொடக்கம் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ந் திகதி வரையான காலத்தினுள் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் நடவடிக்கைகள் இந்த அறிக்கையினுள் உட்புகுத்தப்பட்டுள்ளது.

அதன் சட்டத்தின் பிரகாரம் சபையின் கடமைப் பொறுப்புக்கள் கீழ் குறிப்பிடப்பட்ட விதம் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

- தென்னைப் பயிரிடப்பட்டுள்ள காணிகளில் உற்பத்தித் திறனினை வளர்த்தல் மற்றும் அவ்வாறு வளர்த்தலுக்கு உதவியளித்தல்.
- காணிகளில் தென்னையினைப் பயிர்ச்செய்தல், அவற்றினை பயிரிடுவதனை முன்னேற்றல் மற்றும் முறைமைப்படுத்துவதற்கு உதவியளித்தல்(புற்கள் உள்ளடங்கலாக), வேறு பயிர்க-ளில் ஊடுப்பயிர்களுக்காக பொருத்தமான தென்னைப் பயிரிடப்பட்டுள்ள இடங்களினை தெரிவு செய்தல் மற்றும் அதன் காணிகளில் ஊடுப் பயிர்ச்செய்கையினை முன்னேற்றுதல், செயற்படுத்தல், பேணுதல் மற்றும் பேணுவதற்கு உதவி செய்தல்.
- தென்னை பயிரிடப்பட்டுள்ள காணிகளில் கால்நடை வேளாண்மையினை முன்னேற்றுதல் மற்றும் முறைமைப்படுத்தல், அதற்கு உதவியளித்தல் மற்றும் அதில் ஈடுபடல்.
- தென்னைப் பயிரிடப்பட்டுள்ள காணிகளில் தென்னை மற்றும் வேறு பயிர்களினை வளர்த்தல் சம்பந்தமாக உரிய பயிர்ச்செய்கை முறைமையினை விபரித்தல், பிரபலப்படுத்தல், முன்னேற்றுதல் மற்றும் செயற்படுத்தல்.
- தெங்கு கைத்தொழிலுக்கு உதவியளித்தல், ஆலோசனை மற்றும் பரவலாக்கல் ஊழியர்களுக்கு பயிற்றுவித்தல்.



# பணிப்பாளர் சபை 2023

| | | |
|---|---|---|
| 01 திருமதி ஏ.வி.கே. மாதவி ஹேரத் | — | தலைவர் |
| 02 திரு.கே.எஸ்.விஜயகீர்த்தி | — | மேலதிக செயலாளர் - கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு |
| 03 திரு.ரீ.எம்.ஜே. பண்டார | — | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் - (ப.க.) நிதி அமைச்சு |
| 04 கலாநிதி (திருமதி) சனாதனி ரணசிங்க | — | பணிப்பாளர் - தென்னை ஆராய்ச்சி நிறுவனம் |
| 05 திரு.சுரே' சில்வா | — | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 06 திரு. ஏ.ஈ. பர்னாந்துபுள்ளே | — | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 07 திரு. எஸ்.கே.மளவியாராச்சி | — | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 08 திரு.எம்.கே.ரங்கன சுஜீவ | — | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 09 திரு.துலன் ஹெட்டியாராச்சி | — | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 10 திரு.காவிந்த துல்லாவ | — | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 11 திரு.மல்ராஜ் பீரிஸ் | — | இயக்குநர் குழு பார்வையாளர |
| 12 கலாநிதி ரொ'ான் பெரேரா | — | இயக்குநர் குழு பார்வையாளர |

# தலைவரின் செய்தி



அரை நூற்றாண்டாக உள்நாட்டுப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன், ஏற்றுமதி அடிப்படையிலான பெருந்தோட்டப் பயிர்கள் எனும் வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ஒரு பிரதான பயிராக தென்னைப் பயிர்ச் செய்கையைக் கருதலாம். இவ்வாறான பின்னணியில், தென்னைத் துறையின் முன்னேற்றத்திற்காக ஏறக்குறைய ஐந்து தசாப்தங்களாக அளப்பரிய பணிகளைச் செய்து வரும் ஓர் அரச நிறுவனமாக தென்னைப் பயிர்ச் செய்கை சபையை அறிமுகப்படுத்த முடியும். கடந்த வருடங்களில் ஒரு நாடு என்ற வகையில் எதிர்கொண்ட அனைத்துத் தடைகளையும் வெற்றிகொண்டு, சளைக்காமல் முன்னேறி, 2023 ஆம் ஆண்டிலும் ஓர் அரசாங்க நிறுவனமாக தென்னைத் துறையின் வளர்ச்சிக்கு அதன் அதிகபட்ச பங்களிப்பை அது வழங்கியுள்ளது. அதன்படி, 2023 ஆம் ஆண்டில், 2,944 மில்லியன் வருடாந்த தேங்காய் அறுவடையைப் பெற்று, தென்னை சார்ந்த உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு 700 மில்லியன் அ.டொலர் ஏற்றுமதி வருமானத்தை ஈட்டுவதற்கு தமது பங்களிப்பை வழங்கிய பொறுப்புவாய்ந்த ஓர் அரச நிறுவனமாக தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் பங்களிப்பு பாராட்டப்பட வேண்டும்.

2023 ஆம் ஆண்டில், தேசிய வரவு செலவுத் திட்டத்தின் மூலதனச் செலவுத் தலைப்பின் கீழ், தென்னைப் பயிர்ச் செய்கை சபைக்கு திறைசேரியால் ரூ.500 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில், ஒரு தென்னை விவசாயிக்கு உயர்தர தென்னை மரக்கன்று ஒன்றை வழங்கும் நோக்கத்துடன் 3.14 மில்லியன் தென்னை மரக்கன்றுகள் வழங்கப்பட்டதோடு தென்னைப் பயிர்ச் செய்கை சபையினால் பல்வேறு மானியத் திட்டங்களின் கீழ் களத்தில் 2.715 மில்லியன் தென்னை மரக்கன்றுகளை நட முடிந்தது. இவ்வருடத்தில் பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து விலகி வடமாகாணத்தில் தென்னைப் பயிர்ச் செய்கையை பிரபலப்படுத்தும் நோக்கில் வடமாகாண தென்னை முக்கோணத்தை நிறுவும் விசேட கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. வடமாகாணத்தில் பருத்தித்துறை, சிலாவத்துறை மற்றும் கொக்கிளாய் ஆகிய பிரதேசங்களை இணைத்து அடுத்த மூன்று வருடங்களில் 50,000 ஏக்கர் தென்னங் காணிகளை அபிவிருத்தி செய்வதே இக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாக அமைந்திருந்தது. இக் கருத்திட்டத்தின் கீழ் 2023ஆம் ஆண்டு 466,926 தென்னை மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

மேலும், நகரப்பகுதியை மையமாகக் கொண்டு, குருநாகல் மாவட்டத்தில் மீள் செய்கை மற்றும் கீழ்செய்கையை ஊக்குவித்தல், தென் சிறிய தென்னை முக்கோணத்தில் தென்னை நிலங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் வட மாகாணத்திற்கே தனித்துவமான அதிக விளைச்சலைப் பெற்றுத்தரும் உயர்தரமான தென்னை மரக்கன்றுகளை உற்பத்தி செய்தல் ஆகிய நோக்கங்களுடன், விதைத் தேங்காய்களை பெற்றுக்கொள்ளும் 4 விசேட கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேலும், தென்னைச் செய்கையின் விளைச்சலுக்குரிய முக்கியமான காரணியாக விளங்கும் நோய்கள் மற்றும் பூச்சி சேதங்களுக்கு மத்தியில் 2022 ஆம் ஆண்டில் இலங்கை முழுவதும் வேகமாகப் பரவிச் சென்ற வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த விசேட கருத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த வெள்ளை ஈ பூச்சியின் சேதத்தைக் கட்டுப்படுத்த ரூ. 85.5 மில்லியன் நிதி ஒதுக்கீடுகளாக கிடைத்ததோடு சேதமடைந்த 949,612 தென்னை மரங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு 2,919 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. இந்த ஆண்டில், சேதமடைந்த தென்னை மரங்களுக்கு சிகிச்சை அளிக்க 20,000 லீட்டர் வேப்ப எண்ணெய் மற்றும் 700 திரவ தெளிப்பான்கள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

மேலும், 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், தென் மாகாணத்தில் ப்ரோண்டிஸ்பா பூச்சித் தொல்லை எனப்படும் புதிய பூச்சித் தாக்கம் பதிவாகியது. இந்த பூச்சி அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த ரூ. 9.7 மில்லியன் ஒதுக்கீட்டில் 17,927 நோயுற்ற மரங்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

மேலும், தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் விரிவாக்கச் சேவையில் புதிய அனுபவத்தைச் சேர்த்து, தென்னை விவசாயிகளை அணுகும் வித்தியாசமான முறையியலொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. தென்னைத் துறையில் உள்ள அனைத்துப் பங்குதாரர்களையும் ஒரே மேடையில் ஒன்று சேர்ப்பதன் மூலம், ஒவ்வொரு பிராந்திய அலுவலகத்தையும் உள்ளடக்கும் வகையில் பன்முக அணுகுமுறை எனப்படும் புதிய விரிவாக்க முறையியலுக்குள் நுழைய முடிந்தது.

தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் நாற்றங்கால் மற்றும் தென்னந்தோப்பு அபிவிருத்திப் பிரிவு, தமது அன்றாட உற்பத்திகளுக்கு மேலதிகமாக பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஊக்குவிப்பதன் மூலம் அதிக ஆக்கவிளைவினைப் பெற்றுக்கொள்வதற்காக நெறிப்படுத்தியது. அதன்படி, நாற்றங்கால் அபிவிருத்திப் பிரிவு ரூ. 219.514 மில்லியன் உபரியையும் ஈட்டியுள்ளது.

இந்த வருடத்தில் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்காக எமது பணியாளர்கள் அனைவரும் தங்களை அர்ப்பணித்துள்ளனர் என்பதை தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைவதோடு அவர்கள் அனைவருக்கும் எனது மரியாதைக்குரிய நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, தென்னைப் பயிர்ச் செய்கைத் துறையின் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்படும் பணிகளை வெற்றிகொள்ள கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மற்றும் கௌரவ இராஜாங்க அமைச்சர், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோர் வழங்கிய சரியான வழிகாட்டுதலுக்கும் நெறிப்படுத்தலுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ.வி.கே. மாதவி ஹெரத்
தலைவர்
தென்னைப் பயிர்ச் செய்கை சபை

# பொது முகாமையாளரின் செய்தி



இலங்கை மக்களுக்கு பொருளாதார ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த, பெருந்தோட்ட பயிர் வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள, ஒரு பிரதான பயிராக தென்னையைக் கருதலாம். எனவே, தென்னைச் செய்கையை ஊக்குவிப்பதற்காக தாபிக்கப்பட்டுள்ள மூன்று அரச நிறுவனங்களில், தென்னைப் பயிர்ச் செய்கை சபையானது மக்களுக்கு மிக முக்கியமானதும் நெருக்கமானதுமான ஒரு நிறுவனமாகும். உள்நாட்டு நுகர்வு மற்றும் ஏற்றுமதி தேவைகளைப் பூர்த்தி செய்ய ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும் தேங்காய்களின் அளவை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு, பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற நிலங்களில் தென்னைப் பயிர்ச் செய்கையை பிரபலப்படுத்துவதற்கும், தற்போதுள்ள தென்னைச் செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் முன்னுரிமை அளித்து, 2023 ஆம் ஆண்டில் பல அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

தென்னைப் பயிர்ச் செய்கை சபையினால் 2023 ஆம் ஆண்டில் முறையான தென்னைச் செய்கையின் கீழ், வீட்டுத் தோட்டங்கள் மற்றும் தற்போதுள்ள செய்கைகளில் காணப்படுகின்ற இடைவெளிகளை நடுவுதல் எனும் மானியத்தின் கீழ் 2.715 மில்லியன் தென்னங் கன்றுகளை நடவு செய்ய முடிந்தது. அதனூடாக நாட்டில் உள்ள தென்னைப் பயிர்ச் செய்கை காணிகளுடன் கிட்டத்தட்ட 42,435 ஏக்கர் தென்னைப் பயிர்ச் செய்கை காணிகளைச் சேர்க்க முடிந்தது. அத்துடன் வட மாகாணத்தை மையமாகக் கொண்டு வட மாகணத்தில் தென்னைப் பயிர்ச் செய்கையை பிரபலப்படுத்தும் நோக்கில் அடுத்த மூன்று வருடங்களில் 50,000 ஏக்கர் தென்னங் காணிகளை அபிவிருத்தி செய்யும் வகையில் வட மாகாண தென்னை முக்கோணத்தை நிறுவும் விசேட கருத்திட்டமொன்றை ஆரம்பிக்க முடிந்தது. மேலும், தற்போதுள்ள தென்னங் காணிகளில் முழுமையான பண்ணை அபிவிருத்தியின் மூலம் தென்னங் காணிகளைச் சார்ந்து வணிக விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், கப்பருக்க கடன் திட்டத்தின் கீழ் 586 விவசாயிகளுக்கு 3,003 ஏக்கர் காணிகளின் அபிவிருத்திக்காக ரூ. 430.49 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தில் வெற்றிடமாகக் காணப்பட்ட பல பதவிகளுக்கு ஊழியர் பதவி உயர்வுகளும் புதிய ஆட்சேர்ப்புகளும் செய்யப்பட்டன. மேலும், தென்னைப் பயிர்ச் செய்கை சபையில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சைகளை நடாத்துதல், ஒட்டுமொத்த பணியாளர்களுக்கும் வெளி மற்றும் உள்ளகப் பயிற்சித் திட்டங்கள் மூலம் அறிவு, மனப்பான்மை மற்றும் திறன்களை வளர்ப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

2023 ஆம் ஆண்டில் தென்னைப் பயிர்ச் செய்கை சபையினால் இது போன்ற பல தனித்துவமான திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது எமது ஊழியர்கள் அனைவரும் இந்தச் செயற்பாடுகளின் வெற்றிக்காகத் தங்களை அர்ப்பணித்துள்ளனர் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைவதோடு அவர்கள் அனைவருக்கும் எனது பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவ்வாறு அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் எமக்கு ஊக்கமளித்து, சரியாக நெறிப்படுத்தி தேவையான பலத்தினைப் பெற்றுத்தந்த பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அமைச்சுப் பணியாளர்களுக்கும் குறிப்பாக, தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபைக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டப்ளியு.எம்.ஏ.பீ. விஜேசிங்க
பொது முகாமையாளர்
தென்னைப் பயிர்ச் செய்கை சபை

# தென்னைப் பயிர்ச்செய்கைச˙சபைபற்றி சுருக்கமாக


தீவில் தென்னைப் பயிர்ச்செய்கையினை அபிவிருத்தி செய்வதற்காக சபையின் இலக்கு மற்றும் நோக்க ம்மிகவும் ஒழுங்குமுறையாக மற்றும் உற்பத்தி திறனினை நிறைவேற்றிக் கொள்வதற்காகதலைமை அலுவலகம், பிரதேச ரீதியிலான அலுவலகங்கள் 20, தென்னை அபிவிருத்தி அலுவலர் அலுவலங்கள் 265,தென்னைஅபிவிருத்திபயிற்சிமத்தியநிலையங்கள் 03,நாற்றுமேடைகள் 36,மாதிரி தென்னந் தோட்டங்கள் 11 மற்றும் விதை உற்பத்தி அலகி-னால் தென்னைப் பயிர்ச்செய்கை சபைஉள்ளடக்கியுள்ளது.

## தலைமை அலுவலகம்


9/428,தென்னைப்பயிர்ச் செய்கைச்சபை,
கப்ருகபியச,
டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.
தொலைபேசி - 0115 639833, 0112861331, 0115 635623
தொலைநகல் - 0115 549507
மின்னஞ்சல் - ccb@sltnet.lk
வெப்தளம் - https://coconutsrilanka.lk/

| | |
|---|---|
| பொது முகாமையாளர் | 01 |
| பிரதி பொது முகாமையாளர் | 04 |
| உதவி பொது முகாமையாளர் | 08 |
| பிரதேச முகாமையார் மற்றும் விடய பொறுப்பு முகாமையாளர் | 36 |
| உதவி முகாமையாளர்கள | 95 |
| மொழிப் பெயர்ப்பாளர்கள் | 02 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் தொழிநுட்பம் | |
| - தென்னைஅபிவிருத்திஅலுவலர்கள் | 300 |
| - வதிவிட நாற்று மேடை பொறுப்பு அலுவலர்கள் | 40 |
| - தொழிநுட்ப உதவியாளர்கள் | 03 |
| - பயிற்சி அலுவலர்கள் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் தொழிநுட்பம் அல்லா | |
| - தென்னை அபிவிருத்தி அலுவலர்கள் | 76 |
| - முகாமைத்துவ உதவியாளர்கள் | 200 |
| முதனிலை தரத்தின் ஊழியர்கள் | 152 |
| மொத்த அலுவலக ஆளனியிரின் வலு | 918 ஆகும் |

# தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் நிறுவன கட்டமைப்பு



# தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் பரவலக்கல் மற்றும் சேவை வலைப்பின்னல்



# தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் பரவலக்கல் மற்றும் சேவை வலைப்பின்னல்

| பிரதேச அலுவலகங்கள் 20 | | | |
|---|---|---|---|
| **தொடர்இல** | **பிரதேச அலுவலங்கள்** | **முகவர்** | **தொலைபேசி இலக்கம்** |
| **01** | **அநுராதபுரம்** பிரதேச அலுவலகம் | மூன்றாவது கட்டம், தஹயியாகம சந்தி, அநுராதபுரம். | 025-2222543 |
| **02** | **அம்பாறை** பிரதேச அலுவலகம் | தர்மபாலமாவத்தை, கச்சேரிக்குமுன்னால், அம்பாறை | 063-2222477 |
| **03** | **களுத்துறை** பிரதேச அலுவலகம் | நாகொட, களுத்துறை | 034-2222732 |
| **04** | **கேகாலை** பிரதேச அலுவலகம் | வரகாஉல்லவளவ்வ, கரடுபன,கண்டிவீதி, கேகாலை. | 035-2222120 |
| **05** | **குருநாகலை** பிரதேச அலுவலகம் | வெஹெர, குருநாகலை. | 037-2222534 |
| **06** | **குளியாப்பிட்டிய** பிரதேச அலுவலகம் | இல.20,பன்னலவீதி,குளியாப்பிட்டிய. | 037-2281169 |
| **07** | **கம்பஹா** பிரதேச அலுவலகம் | பென்டியமுல்ல,கம்பஹா. | 033-2222037 |
| **08** | **காலி** பிரதேச அலுவலகம் | லபுதுவ, அக்மீமன,காலி. | 091-2234501 |
| **09** | **திருகோணமலை** பிரதேச அலுவலகம் | கும்புறுப்பிட்டி,திருகோணமலை | 026-2054018 |
| **10** | **பொலந்நறுவை** பிரதேச அலுவலகம், | புதியநகரம்,பொலந்நறுவை. | 027-2222377 |
| **11** | **மட்டக்களப்பு** பிரதேச அலுவலகம் | மயிலாம்பாவெளி, தன்னாமுனை,மட்டக்களப்பு. | 065-2240103 |
| **12** | **மாத்தறை** பிரதேச அலுவலகம் | இல. 331/9,அநாகரிகதர்மபாலமாவத்தை, நூபே, மாத்தறை. | 041-2222060 |
| **13** | **மாத்தளை** பிரதேச அலுவலகம் | கண்டிவீதி, கோஹோம்பிலிவல,மாத்தளை | 066-2222047 |
| **14** | **மாரவில** பிரதேச அலுவலகம் | முதுகட்டுவ,மாரவில. | 032-2254237 |
| **15** | **மொணராகலை** பிரதேச அலுவலகம் | ஹுலங்தாவதெற்கு,மொணராகலை. | 055-2276058 |
| **16** | **யாழ்ப்பாணம்** பிரதேச அலுவலகம் | இல.595/10, நாவலர்வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம் | 021-2284501 |
| **17** | **இரத்தினபுரி** பிரதேச அலுவலகம் | புதியநகரம்,இரத்தினபுரி. | 045-2228561 |
| **18** | **ஹம்பாந்தோட்டை** பிரதேச அலுவலகம் | இல.27, தங்காலைவீதி,ஹம்பாந்தோட்டை | 047-2220144 |
| **19** | **வவுனியாவ** பிரதேச அலுவலகம் | இல.25, பத்தினியார், மயிலங்குளம், நாச்சிக்குளம், வவுனியா | 024-2050344 |
| **20** | **கண்டி பிராந்திய அலுவலகம்** | இல 74/2, போதியங்கன மாவத்தை, போவல, கண்டி | 081-2222447 |

**தென்னைப்பயிர்ச்செய்கைச்சபைக்குரியவிதைத்தேங்காய்க்கன்றுகள்நாற்றுமேடைகள் 39 ஆகும்.**

| தொடர்இல | நாற்றுமேடை | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 01 | அநுராதபுரம் | 1. **கலாவெவ** தென்னங் கன்று நாற்று மேடை, கலாவெவ, விஜித்தபுர. | 025-2264194 |
| 02 | அம்பாறை | 2. **உஹன** தென்னங் கன்று நாற்று மேடை, பாலம்கந்தவுர, உஹன. | 063-2250119 |
| 03 | களுத்துறை | 3. **கொரொஸ்துவ** தென்னங் கன்று நாற்று மேடை, கொரொஸ்துவ, வாத்துவ. | 038-2295126 |
| 04 | கேகாலை | 4. **மத்தமகொட** தென்னங் கன்று நாற்று மேடை, மத்தமகொட, கன்னன்தொட்ட. | 035-2289105 |
| | | 5. **எரமிணிகொல்ல** தென்னங் கன்று நாற்று மேடை, எரமிணிகொல்ல, ஹிரிவடுன்ன. | 035-2263006 |
| 05 | குருநாகலை | 6. **இப்பாகமுவ** தென்னங் கன்று நாற்று மேடை, இப்பாகமுவ. | 037-2235776 |
| | | 7. **வாரியபொல** தென்னங் கன்று நாற்று மேடை, வாரியபொல . | 037-2267691 |
| | | 8. **நிகவெரட்டிய** தென்னங் கன்று நாற்று மேடை, நிகவெரட்டிய. | 037-2260619 |
| | | 9. **பொல்கஹாவெல** தென்னங் கன்று நாற்று மேடை, செரபீஸ்வத்த, பனலிய, பொல்கஹாவெல | 037-2244367 |
| | | 10. **வென்னொருவ** தென்னங் கன்று நாற்று மேடை, முத்துகலவத்த, வென்னொருவ. | 037-2249836 |
| | | 11. **தொடங்கஸ்லந்த**தென்னங் கன்று நாற்று மேடை, பலவத்தலவத்த, தொடங்கஸ்லந்த. | 037-2252625 |
| 06 | குளியாப்பிட்டிய | 12. **பிங்கிரிய** தென்னங் கன்று நாற்று மேடை, පුසන්නගම, பிங்கிரிய. | 032-2246425 |
| | | 13. **ஹெட்டிபொல** தென்னங் கன்று நாற்று மேடை, ஹெட்டிபொல. | 037-2291332 |
| | | 14. **தியதொர** தென்னங் கன்று நாற்று மேடை, பஹலதியதொர. | 037-2282537 |
| 07 | கம்பஹா | 15. **வல்பிட்ட** தென்னங் கன்று நாற்று மேடை, வல்பிட்ட. | 033-2272559 |
| | | 16. **கிரிந்திவெல** தென்னங் கன்று நாற்று மேடை, கிரிந்திவெல. | 033-2267704 |
| 08 | காலி | 17. **பத்தேகம** தென்னங் கன்று நாற்று மேடை, பெடஸ்ரூவத்த, ஹல்பாத்தொட்ட, பத்தேகம, காலி. | 091-2292745 |
| | | 18. **லபுதுவ** தென்னங் கன்று நாற்று மேடை, லபுதுவ, அக்மீமன, காலி. | 091-2234501 |
| 09 | திருகோணமலை | 19. **கும்புறுப்பிட்டி** தென்னங் கன்று நாற்று மேடை, கும்புறுப்பிட்டி, திருகோணமலை. | 026-2054018 |
| 10 | பொலந்நறுவை | 20. **பராக்கிரம சமுத்திரம்** தென்னங் கன்று நாற்று மேடை, ரிச்சர்ட் அலுவிஹாரே பூங்கா, பராக்கிரம சமுத்திரம். | 027-2224304 |
| | | 21. **உல்ஹிட்டிய** தென்னங் கன்று நாற்று மேடை, உல்ஹிட்டிய வத்த, கிராந்துருகோட்டை. | 024-2222377 |
| 11 | மட்டக்களப்பு | 22. **மயிலாம்பாவெலி** தென்னங் கன்று நாற்று மேடை, மயிலாம்பாவெலி, தன்னாமுனை,மட்டக்களப்பு | 065-2240924 |
| 12 | மாத்தளை | 23. **பல்லேகெலே** தென்னங் கன்று நாற்று மேடை, பல்லேகெலே, பலகொல்ல, கெங்காலை. | 081-2063595 |
| 13 | மாரவில | 24. **கிரிமெட்டியான** தென்னங் கன்று நாற்று மேடை, கிரிமெட்டியான, லுணுவில. | 032-2254237 |

| | | | |
|---|---|---|---|
| | | **25. வில்பொத்த** தென்னங் கன்று நாற்று மேடை, வில்பொத்த, பத்துலுஓய. | 032-2254237 |
| | | **26. அட்டவில்லுவ** தென்னங் கன்று நாற்று மேடை, அட்டவில்லுவ, குருநாகலை வீதி, புத்தளம். | 032-2254237 |
| 14 | **மொணராகலை** | **27. ஹந்தபானாகல** தென்னங் கன்று நாற்று மேடை, ஹந்தபானாகல, வேஹெரயாய. | 055-2274665 |
| | | **28. வெலிப்பிட்டிய** தென்னங் கன்று நாற்று மேடை, வெலிப்பிட்டிய வத்த, நன்புராவ, பிபில. | 055-2274665 |
| 15 | **வவுனியா** | **29. மடு** தென்னங் கன்று நாற்று மேடை. வவுனியா | 024-2050344 |
| 16 | **யாழ்ப்பாணம்** | **30. கிளிநொச்சி** தென்னங் கன்று நாற்று மேடை, D 3, பன்னன்கன்னி,கிளிநொச்சி. | 021-2284501 |
| | | **31. தேவிபுரம்** தென்னங் கன்று நாற்று மேடை, இல. 29/Aபகுதி, தேவிபுரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. | 021-2284501 |
| | | **32. அச்சுவேலி** தென்னங் கன்று நாற்று மேடை, வசாவிலான், அச்சுவேலி, யாழ்ப்பாணம் | 021-2284501 |
| | | **33. அளம்பில்** தென்னங் கன்று நாற்று மேடை**,** அளம்பில், முல்லைத்தீவு. | 021-2284501 |
| 17 | **இரத்தினபுரி** | **34. எம்பிலிப்பிட்டிய** தென்னங் கன்று நாற்று மேடை, துங்கம, எம்பிலிப்பிட்டிய. | 047-2230569 |
| 18 | **ஹம்பாந்தோட்டை** | **35. மெதமுலன** தென்னங் கன்று நாற்று மேடை, மெதமுலன,வீரக்கெட்டிய. | 047-2246359 |
| | | **36. மயுரபுர** தென்னங் கன்று நாற்று மேடை, மயுரபுர, ஹம்பாந்தோட்டை | 047-2220144 |

| மாதிரி விதைத் தேங்காய்த் தோட்டம் 11 | | |
|---|---|---|
| தொடர் இல | முகவரி | தொலைபேசி இலக்கம் |
| 01 | **மஹாயாய** மாதிரி தென்னந் தோட்டம், மாகந்துர, கோனவில. | 031-2299781 |
| 02 | **லேனவ** மாதிரி தென்னந் தோட்டம், ஹிரியால, லேனவ. | 037-4944425 |
| 03 | **டேசிவெலி** மாதிரி தென்னந் தோட்டம், இலுக்வெல, வேஉட | 037-2299880 |
| 04 | ***ரநதெனியா*** மாதிரி தென்னந் தோட்டம், வாரியபொல. | 037-5555217 |
| 05 | **நாகன்சோலை** மாதிரி தென்னந் தோட்டம், வன்னி, ரஸ்நாயக்கபுர. | 037-4944464 |
| 06 | **போப்பிட்டிய** மாதிரி தென்னந் தோட்டம், போப்பிட்டிய.(வடமேல்) | 037-2288601 |
| 07 | **கர்ட்லன்ட்** மாதிரி தென்னந் தோட்டம், நாம்பிரித்தன்கடவர, வெலிபென்னகஹமுல. | 037-4930928 |
| 08 | **கோஹோம்பான** மாதிரி தென்னந் தோட்டம், கோஹோம்பான வத்த, கோனாகொல்ல. | 063-3632186 |
| 09 | **கொரை** மாதிரி தென்னந் தோட்டம், திருக்கோவில். | 067-3694530 |
| 10 | **பாசிக்குடா** மாதிரி தென்னந் தோட்டம், கற்குடா, பாசிக்குடா. | 065-2050224 |
| 11 | **பளை** மாதிரி தென்னந் தோட்டம், கண்டிவீதி, பளை. | 021-2050013 |

| தென்னைப் பயிர்ச்செய்கைக்கு உரிய பயிற்சி மத்திய நிலையங்கள் 03 | | | |
|---|---|---|---|
| **தொடர்இல** | **பயிற்சி மத்திய நிலையம்** | **முகவரி** | **தொலைபேசி இலக்கம்** |
| **01** | **லுணுவில தென்னை அபிவிருத்தி பயிற்சிமத்திய நிலையம்** | உதவி பொது முகாமையாளர்(பயிற்சி), தென்னை அபிவிருத்தி பயிற்சி மத்திய நிலையம், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, பண்டிருப்புவத்த, லுணுவில. | 031-2255048 |
| **02** | **மெதமுலன தக்ஷின லங்கா தென்னை அபிவிருத்தி பயிற்சிமத்திய நிலையம்** | களப் பொறுப்பு அலுவலர், தக்ஷின லங்காதென்னை அபிவிருத்தி பயிற்சி மத்திய நிலையம், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, மெதமுலன, வீரக்கெட்டிய | 047-2257534 |
| **03** | **யாழ்ப்பாணம் தென்னை அபிவிருத்தி பயிற்சிமத்திய நிலையம்** | களப் பொறுப்பு அலுவலர், தென்னங் கன்று நாற்று மேடை, அரலிய வீதி, அச்சுவேலி, யாழ்ப்பாணம் | 021-3141245 |

| விதை உற்பத்தி அலகு | | | |
|---|---|---|---|
| **01** | **விதை உற்பத்தி அலகு** | இல.19, தம்மிட்ட வீதி, நீர்க்கொழும்பு | 031-2226119 |

| ***தென்னை தொழிநுட்ப பூங்கா*** | | | |
|---|---|---|---|
| **01** | *தென்னை கலாச்சார பூங்கா* | *தென்னை தொழிநுட்ப பூங்கா பாசிக்குடா மாதிரி தென்னந் தோட்டம், கற்குடா.* | 065-2050224 |

| தென்னைப் பயிர்ச்செய்கைக்கு உரிய சுற்றுலா இல்லங்கள் 07 | | | |
|---|---|---|---|
| **தொடர் இலக்கம்** | **சுற்றுலா இல்லம்** | **முகவரி** | **தொலைபேசி இலக்கம்** |
| 01 | கதிர்காமம் | “கொக்கோவிலா சுற்றுலா இல்லம்”, சுற்றுலா இல்ல இடம், டிபோ வீதி, கதிர்காமம். | 0472236344 |
| 02 | பாசிக்குடா | பாசிக்குடா மாதிரி தென்னந் தோட்டம், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, பாசிக்குடா, கற்குடா. | 0652050224 |
| 03 | பளை | பளைமாதிரி தென்னந் தோட்டம், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, A9 வீதி, பளை. | 0212050013 |
| 04 | பொலந்நறுவை | “புலத்திசி கொக்கோவிலா சுற்றுலா இல்லம்”, தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, | 0272052881 |

| | | | |
|---|---|---|---|
| | | கலஹகல வீதி,<br>புதிய நகரம்,<br>பொலந்நறுவை. | |
| 05 | நிலாவெளி | “கோகோ வில்லா சுற்றுலா இல்லம்”,<br>குபுருபிடி,<br>திருகோணமலை. | 0262054019 |
| 06 | கொஹொம்பான | கொஹொம்பான மாதிரி தென்னந் தோட்டம்,<br>தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை,<br>கோனாகொல்ல,<br>அம்பாறை. | 0632222477 |
| 07 | ஹந்தபானாகல | “ஹந்தபானாகலசுற்றுலா இல்லம்”,<br>ஹந்தபானாகல தென்னைங் கன்று நாற்றுமேடை,<br>ஹந்தபானாகல,<br>வெஹெரயாய. | 0552274665 |
| **08** | கட்டுகெலியாவ | “கொக்கோவிலாசுற்றுலா இல்லம்”,<br>மஹிலா மாவத்தை,<br>கட்டுகெலியாவ,<br>கல்கடவல. | 0252222543 |
| **09** | பொலந்நறுவை | “போபிட்டிய சுற்றுலா பதவி இல்லம் ”,<br>போபிட்டிய மாதிரி தென்னந் தோட்டம்,<br>கு/போபிட்டிய(வடமேல்) | 0372288601 |

| **“கப்துருபாய” விற்பனை மற்றும் சேவை மத்தியநிலையம் 05** | | |
|---|---|---|
| **தொடர் இல** | **முகவரி** | **தொலைபேசி இலக்கம்** |
| **01** | மஹாயாயமாதிரி தென்னந் தோட்டம்<br><br>மாகந்துர, கோனவில. | 031-2299781 |
| **02** | போப்பிட்டியமாதிரி தென்னந் தோட்டம்<br><br>போப்பிட்டிய.(வடமேல்) | 037-2288601 |
| **03** | தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை,<br>“கப்ருக பியச”,டென்சில் கொப்பேகடுவை மாவத்தை, பத்தரமுல்லை. | 011-2861331 |
| **04** | டேசிவெலி மாதிரி தென்னந் தோட்டம்,<br>இலுக்வேல, வேஉட. | 037-2299880 |
| **05** | அம்பாறை பிரதேச அலுவலகம்,<br><br>தர்மபால மாவத்தை, கச்சேரிக்கு முன்னால், அம்பாறை | 063-2222477 |

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 01 விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டு பிரிவு | 055 |
| 02 மாதிரி தென்னந் தோட்டம் மற்றும் நாற்று மேடை அபிவிருத்தி பிரிவு | 077 |
| 03 நிருவாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவ பிரிவு | 098 |
| 04 உள்ளக கணக்காய்வுப் பிரிவு | 103 |
| 05 நிதி முகாமைத்துவ பிரிவு | 108 |
| 06 கணக்காய்வதிபதியின் அறிக்கை | 114 |

# 1. விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு

## 1.1தென்னை பயிர்ச்செய்கை சபையினால் நடைமுறைபடுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

### 1.1.1முறையான தென்னந் செய்கையின் கீழ் கன்றுகளை நடவு செய்தல்

இந்த மானியத்தின் கீழ், புதிய நடவு, மீள் நடவு, அல்லது கீழ் நடவுகளுக்கு மானிய விலையில் தென்னங் கன்றுகள் வழங்கப்படுகின்றன. இதன்போது குறைந்தபட்சம் ¼ ஏக்கரில் இருந்து அதிகபட்சம் 15 ஏக்கர் வரை தென்னங் கன்றுகள் வழங்கப்படுகின்றன. மேலும் செய்கையாளர்களுக்கு இந்த கன்றுகளைகொண்டுசெல்வதற்காக போக்குவரத்து வசதி வழங்கப்படுவதோடு தென்னங் கன்றுகளை வழங்குவதற்கு முன் நடவு மற்றும் பராமரிப்பு குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகளையும் தென்னை பயிர்ச்செய்கை சபை வழங்குகிறது. 2023 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் ஆண்டு இறுதிக்குள் 348,000 தென்னங் கன்றுகளை நட இலக்கு வைக்கப்பட்டதோடு வருட முடிவில் சபைக்கு386,247தென்னங் கன்றுகளை நடவு செய்ய முடிந்தது. இதற்கு மேலதிகமாக தெம்பிலிசெய்கை ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 11,021 தெம்பிலி மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

### 1.1.2.வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டம்

இலங்கையர்களின் தினசரி தேங்காய் நுகர்வுத் தேவையை அவர்களது சொந்த தோட்டத்தில் இருந்து உற்பத்தி செய்ய வீட்டுத்தோட்டக்காரர்களை வழிநடத்தும் முக்கிய நோக்கத்துடன் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த மானியத் திட்டமானது தோட்டக்காரர்களுக்கு பல முறைகள் மூலம் தென்னங் கன்றுகளை வழங்குகின்றது. இதன்கீழ் 1,759,541தென்னங் கன்றுகள் மானியமாக செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த கன்றுகள் பின்வரும் முறைகளின் கீழ் நடப்பட்டன.

1. வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித் திட்டம்
2. ஶ்ரீ சம்பத கப்ருக்க புதிய வீட்டுக்கான பயிர்ச் செய்கைத் திட்டம்
3. விசேட வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டம்
4. அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் வீட்டுத்தோட்ட தென்னங் கன்றுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

**1.1.3.வெற்றிடமாகவுள்ள இடங்களில் மரக்கன்றுகளை நடுவதன் மூலம் தென்னங் காணியொன்றில்காணப்பட வேண்டிய தென்னை மரங்களின் உகந்த எண்ணிக்கையைப் பராமரித்தல்**

இலங்கையின் தென்னந்தோப்புக் காணிகளில் தென்னை உற்பத்தி குறைவதற்கு ஒரு ஏக்கருக்கு உகந்த எண்ணிக்கையிலான தென்னை மரங்கள் இல்லாததே பிரதான காரணமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் தென்னங் காணி புனரமைப்பின் கீழ் வெற்றிடமாகவுள்ள இடங்களில் நடுவதற்கு இலக்காகக் கொள்ளப்பட்ட மரக்கன்றுகளின் எண்ணிக்கை 60,000 ஆக இருந்தது. இந்த திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 92,113 தென்னங் கன்றுகள் நாட்டப்பட்டன.

மேற்கூறிய புதிய/மீள்/கீழ்நடவு நிகழ்ச்சித் திட்டம், வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித் திட்டம், வெற்றிடமாகவுள்ள இடங்களிலான நடவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனைத்து மரக்கன்றுகளும்,ஒரு விவசாயிக்குரூ.175/= மதிப்புள்ள ஒரு தரைக் கன்று ரூ.75/= மற்றும் ரூ.300/= மதிப்புள்ள தொட்டியில் நடும் ஒரு தொட்டிக் கன்றுரூ.200/=என்றவாறுசலுகை விலையில் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, ஒரு தரை தென்னங் கன்றினதும் தொட்டியில் நடும் தென்னங் கன்றினதும் மானியப் பெறுமதி ரூ.100/=ஆகும். இதன்படி, 2023 இல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை 3,139,661 மில்லியன் என்பதோடு, அதில் 423,813 தென்னங் கன்றுகள் பணத்திற்கு விற்கப்பட்டதுடன்2,715,848 தென்னங் கன்றுகள் மானியத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை இல.1.1 - 2023 ஆம் ஆண்டில் பிராந்திய அலுவலக அளவில் முன்னேற்றம்**

| பிராந்திய அலுவலகம் | முறையான தென்னை பயிர்ச்செய்கையின் கீழ் நடவு செய்வதன் பௌதீக முன்னேற்றம் (கன்றுகள்) | வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டம் - முன்னேற்றம் (கன்றுகள்) | வெற்றிடமாகவுள்ள இடங்களில் நடவு முன்னேற்றம் (கன்றுகள்) |
|---|---|---|---|
| மொனராகலை | 20,506 | 151,721 | 1,151 |
| மாத்தறை | 3,339 | 24,142 | 539 |
| குருநாகல் | 58,791 | 215,172 | 13,576 |
| குளியாப்பிட்டி | 50,293 | 124,367 | 31,392 |
| கேகாலை | 9,331 | 89,054 | 2,102 |
| கம்பஹா | 25,579 | 111,278 | 8,457 |
| களுத்துறை | 7,673 | 68,157 | 2,644 |
| மாரவில | 45,445 | 121,709 | 15,800 |
| இரத்தினபுரி | 11,886 | 86,492 | 1,965 |
| ஹம்பாந்தோட்டை | 36,189 | 94,408 | 3,121 |
| அனுராதபுரம் | 28,729 | 102,370 | 3,401 |
| திருகோணமலை | 9,709 | 51,467 | 805 |
| பொலன்னறுவை | 9,112 | 38,996 | 826 |
| அம்பாறை | 17,065 | 89,380 | 1,178 |
| மாத்தளை | 12,165 | 69,789 | 1,026 |
| காலி | 8,639 | 69,571 | 1,318 |
| மட்டக்களப்பு | 9,048 | 93,464 | 906 |
| யாழ்ப்பாணம் | 15,166 | 58,857 | 1,174 |
| வவுனியா | 1,932 | 27,239 | 238 |
| கண்டி | 5,650 | 71,908 | 494 |
| மொத்தம் | **386,247** | **1,759,541** | **92,113** |

அதன்படி, 2023 ஜூலை மாதத்தில், மதிப்பிடப்பட்ட தென்னைப் பரப்பளவு 480,215 ஹெக்டேராகும். மாவட்ட வாரியாக தென்னை பயிர்ச்செய்கையின் மதிப்பிடப்பட்ட பரப்பளவு கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை இல.1.2. -2023 ஆம் ஆண்டில் மாவட்டம் வாரியாக மதிப்பிடப்பட்டதென்னை பயிர்ச்செய்கையின் பரப்பளவு**

| மாவட்டம் | ஏக்கர் எண்ணிக்கை | ஹெக்டேர்* |
|---|---|---|
| கொழும்பு | 20,925 | 8,472 |
| கம்பஹா | 113,909 | 46,117 |
| களுத்துறை | 31,722 | 12,843 |
| கண்டி | 23,650 | 9,575 |
| மாத்தளை | 32,360 | 13,101 |
| நுவரெலியா | 3,964 | 1,605 |
| காலி | 35,227 | 14,262 |
| மாத்தறை | 37,310 | 15,105 |
| ஹம்பாந்தோட்டை | 65,470 | 26,506 |
| யாழ்ப்பாணம் | 18,088 | 7,323 |
| கிளிநொச்சி | 5,379 | 2,178 |
| மன்னார் | 7,599 | 3,077 |
| வவுனியா | 10,008 | 4,052 |
| முல்லைத்தீவு | 11,917 | 4,825 |
| மட்டக்களப்பு | 14,364 | 5,815 |
| அம்பாறை | 20,210 | 8,182 |
| திருகோணமலை | 10,811 | 4,377 |
| குருநாகல் | 362,251 | 146,660 |
| புத்தளம் | 136,533 | 55,277 |
| அனுராதபுரம் | 56,361 | 22,818 |
| பொலன்னறுவை | 25,243 | 10,220 |
| பதுளை | 11,211 | 4,539 |
| மொனராகலை | 41,419 | 16,769 |
| இரத்தினபுரி | 52,127 | 21,104 |
| கேகாலை | 20,925 | 8,472 |
| இலங்கை | **1,168,983** | **473,274** |

*** மதிப்பிடப்பட்டுள்ளது**

### 1.1.4. 2023 ஆம் ஆண்டில் விசேட கருத்திட்டங்கள்

2023 ஆம் ஆண்டில், 05 விசேட கருத்திட்டங்களுக்காக ரூ.45.9 மில்லியன் ஒதுக்கீடு தென்னைத் துறையில் முதலீடு செய்யப்பட்டது.

1. பிரதேசத்திற்குத் தனித்துவமான அதிக அறுவடையைத் தரும்தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான விதை தேங்காய்களை கொள்வனவு செய்யும் கருத்திட்டம்.

வடமாகாணத்தை இலக்கு வைத்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்காக 9.8 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதுடன், விதைத் தேங்காய்களில் இருந்து பெறப்படும் 83,000 தென்னங் கன்றுகள் எதிர்காலத்தில் வடமாகாண விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

2. நகர்ப்புற வீட்டுத்தோட்டங்களில் கலப்பின தென்னங் கன்றுகளை நடுவதற்கு தென்னை ஆராய்ச்சி நிறுவனத்திடம் இருந்து தென்னங் கன்றுகளை கொள்வனவு செய்யும் கருத்திட்டம்.

இந்த கருத்திட்டம் நகர்ப்புறங்களை மையமாகக் கொண்டு தீவு முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக ரூ.9.8 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் கீழ் கொள்வனவு செய்யப்படும்CRIC 65 கலப்பின தென்னங் கன்றுகள்24,500 நகர்ப்புற வீட்டுத்தோட்டங்களில் நடப்படும்.

3. குருநாகல் மாவட்டத்தில் மீள் நடவு மற்றும் கீழ்ப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான விதை தேங்காய்களை கொள்வனவு செய்யும் கருத்திட்டம்.

இத்திட்டத்திற்காக ரூபா 8.8 மில்லியன் செலவிடப்பட்டதுடன், இதன் கீழ் குருநாகல் மாவட்டத்தில் தென்னை மீள்பயிர் மற்றும் கீழ்ப்பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்காக ஒரு தென்னங் கன்றுக்கு ரூபா 200.00 மானியம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் மூலம் 80,000 விதை தேங்காய்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

4. தெற்கு சிறிய தென்னை முக்கோணத்தில் உள்ள தென்னங் காணிகளின் அபிவிருத்திக்காக தென்னங் கன்று உற்பத்திக்குத் தேவையான விதை தேங்காய்களை கொள்வனவு செய்யும் கருத்திட்டம்.

இத்திட்டத்திற்காக 8 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதுடன், இதன்கீழ் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தென்னங் கன்றுகளை நடுவதற்காக 89,090 விதை தேங்காய்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இந்த விதை தேங்காய்களில் இருந்து பெறப்படும் தென்னை மரக்கன்றுகள் 2024 ஆம் ஆண்டில் தென்னை மரக்கன்று ஒன்றுக்கு ரூ.200.00 மானியத்தில் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படும்.

5. வடக்கு மாகாண தென்னை முக்கோணத்தைத் தாபிக்கும் கருத்திட்டம்.

வடமாகாணத்தில் பருத்தித்துறை, சிலாவத்துறை மற்றும் கொக்கிளாய் ஆகிய பிரதேசங்களை இணைக்கும் வகையில் 50,000 ஏக்கர் தென்னங் காணிகளை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம் 2023 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்படும். அதன் ஆரம்ப கட்டமாக 2023 ஆம் ஆண்டு வட மாகாணத்திற்கு 466,926 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக 9.5 மில்லியன் ரூபா அமைச்சு ஒதுக்கீடாக வழங்கப்பட்டுள்ளதுடன் தென்னை மரக்கன்றுகளை உற்பத்தி செய்வதற்கும் கொண்டு செல்வதற்கும் செலவிடப்பட்டஎஞ்சிய பணம் தென்னை பயிர்ச்செய்கை சபையினால் செலவிடப்பட்டுள்ளது.

**அட்டவணை இல1.3. - 2023 ஆம் ஆண்டில் வடக்கு தென்னை முக்கோண கருத்திட்டத்தின் கீழ் தென்னை மரக்கன்றுகளை வழங்குவதன் முன்னேற்றம்**

| மாவட்டம் | விநியோகிக்கப்பட்ட தென்னை மரக்கன்றுகளின் எண்ணிக்கை |
|---|---|
| யாழ்ப்பாணம் | 62,488 |
| கிளிநொச்சி | 38,395 |
| முல்லைத்தீவு | 139,141 |
| வவுனியா | 153,117 |
| மன்னார் | 73,785 |
| மொத்தம் | 466,926 |

### 1.1.5.<u>வெலிகம ஓலை வாடல் மற்றும் அழுகல் நோய் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம்</u>

இலங்கையின் தென்பகுதியில் மாத்தறை மாவட்டத்திற்கு உட்பட்ட வெலிகம பிரதேச செயலகப் பிரிவில் முதலில் பதிவாகிய வெலிகம ஓலைகள் வாடி அழுகும் நோய் பின்னர் காலி மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் பதிவாகியது. இந்த நோய் ஆனதுவைரஸுக்கு மிகவும்

ஒத்திருக்கும்பைட்டோபிளாஸ்மா நோய்க்கிருமியால் ஏற்படுத்தப்படுவதோடு தற்போது உலகில் எந்த நாட்டிலும் பைட்டோபிளாஸ்மாவுக்கு சரியான சிகிச்சை கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்நோய் கண்டறியப்பட்டதன் பின்னர், தென்னை ஆராய்ச்சி நிறுவனம்தாவர பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டப்பூர்வ அதிகாரியான விவசாயப் பணிப்பாளர் நாயகத்துடன் இணைந்து மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் காலி மாவட்டங்களின் 157 கிராம சேவைகர் பிரிவுகளை நோய் வலயங்களாக பெயரிட்டுள்ளது.

அத்துடன் நோய் பரவுவதை தடுக்கும் வகையில் காலி தெனியாவில் இருந்து ஹக்மன ஊடாக தங்காலை வரையான 86 கிலோ மீற்றர்நீளமான மற்றும்3 கிலோ மீற்றர்அகலமான வலயம் பெயரிடப்பட்டது. இந்த வலயத்தில் காணப்பட்ட அனைத்து நோய்வாய்ப்பட்ட மரங்களும் அகற்றப்பட்டு, இந்த வலயத்தின் எல்லைக்கு வெளியே தென்னை மரத்தின் எந்த உயிருள்ள பொருட்களையும் நகர்த்துவது தாவர பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டது. மேலும், இந்த வகையைச் சேர்ந்த ஏனைய பயிர்களை கொண்டு செல்லவும் விவசாயத் திணைக்களம் தடை விதித்துள்ளது.

இந்நோயைக் கட்டுப்படுத்த வேறு மாற்று நடவடிக்கைகள் இல்லாததால், தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிவுறுத்தலின்படி, கடந்த 2008-ம் ஆண்டு முதல் நோய் தாக்கிய தென்னை மரங்களை அகற்றும் பணி தொடங்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டில், தென்னை பயிர்ச் செய்கை சபையானது 157 கிராம அலுவலர் பிரிவுகளை ஆய்வு செய்து நோயுற்ற 22,132 மரங்களைஅடையாளம் கண்டுள்ளது. அதில் இருந்து 16,656 நோயுற்ற மரங்கள்தற்போது மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. 4,757 மரங்களுக்குதடுப்பூசி போடப்பட்டது. இழப்பீடாக 8,063மரங்களுக்குவழங்கப்பட்ட தொகை ரூ.மி.25.129ஆகும்.

**அட்டவணை இல.1.4.- 2023 இல் வெலிகம ஓலை வாடல் மற்றும் அழுகல் நோய் தடுப்பு வேலைத்திட்டத்தின் முன்னேற்றம்**

| மாவட்டம் | ஆய்வு செய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை | அடையாளப்படுத்தப்பட்ட மரங்களின் எண்ணிக்கை | அகற்றப்பட்ட மரங்களின் எண்ணிக்கை | தடுப்பூசி போடப்பட்ட மரங்களின் எண்ணிக்கை | கொடுப்பனவுகள் செலுத்தப்பட்ட மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| மாத்தறை | 68 | 5,393 | 12,522 | 3,459 | 6,069 |
| காலி | 47 | 1,528 | 2,192 | 871 | 942 |
| ஹம்பாந்தோட்டை | 42 | 1,401 | 1,942 | 427 | 1,052 |
| மொத்தம் | **157** | **8,322** | **16,656** | **4,757** | **8,063** |

### 1.1.6. <u>வெள்ளை ஈ</u>

2019 ஆம் ஆண்டில், இந்த சேதம் முக்கியமாக கேகாலை மற்றும் கம்பஹா மாவட்டங்களைச் சார்ந்து பதிவாகியதுடன் தென்னங் செய்கை சார்ந்ததாக வெள்ளை ஈ பூச்சி சேதம் மிக வேகமாக பரவியது. அதன்படி, தற்போது தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின்படி, தென்னை பயிர்ச்செய்கை சபையின் கள அலுவலர்களின் வழிகாட்டுதலின் கீழ் சேதம் மற்றும் சேதத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்படி, வெள்ளை ஈக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடாக ரூ.மி.85.5 ஒதுக்கப்பட்டதுடன்2023.12.31ஆம் திகதி நிதி முன்னேற்றம் ரூ.மி. 85.5 ஆகும். இதன் மூலம் 500 பவர்லிக்விட் ஸ்பிரேயர் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வெள்ளை ஈ தாக்கிய 8 லட்சம் தென்னை மரங்களுக்கு வேப்பெண்ணெய்மற்றும் சவர்க்காரத் திரவ கலவையை தெளிக்கும் பணி விசேட திட்டமாக மேற்கொள்ளப்பட்டது.

**அட்டவணை இலக்கம்1.5 : பிராந்திய அலுவலகங்களுக்கு 700 பவர் ஸ்பிரேயர்களை வழங்குவதில் முன்னேற்றம்**

| தொ/இ | பிராந்திய அலுவலகம் | இதுவரை கிடைத்த200 இயந்திரங்கள் விநியோகிக்கப்பட்ட விதம் | பிராந்திய அலுவலகத்திற்கு 500 புதிய இயந்திரங்களை ஒதுக்கீடு செய்யும் விதம் (விசேட திட்ட ஏற்பாட்டின் மூலம் பெறப்பட்டது) |
|---|---|---|---|
| 1 | கம்பஹா | 38 | 57 |
| 2 | களுத்துறை | 12 | 36 |
| 3 | கேகாலை | 22 | 27 |
| 4 | குருநாகல் | 29 | 90 |
| 5 | மாத்தளை | 8 | 39 |
| 6 | காலி | 11 | 30 |
| 7 | மாரவில | 19 | 33 |
| 8 | குளியாப்பிட்டி | 18 | 40 |
| 9 | மாத்தறை | 3 | 30 |
| 10 | ஹம்பாந்தோட்டை | 3 | 23 |
| 11 | இரத்தினபுரி | 6 | 26 |
| 12 | அம்பாறை | 4 | 10 |
| 13 | மட்டக்களப்பு | 3 | 8 |
| 14 | மொனராகலை | 2 | 12 |
| 15 | அனுராதபுரம் | 4 | 7 |
| 16 | பொலன்னறுவை | 3 | 7 |
| 17 | வவுனியா | 2 | 10 |
| 18 | திருகோணமலை | 3 | 6 |
| 19 | யாழ்ப்பாணம் | 4 | 9 |
| 20 | தெ.அ..ப.நி. | 5 | - |
| 21 | தலைமை அலுவலகம் | 1 | - |
| மொத்தம் | | 200 | 500 |

இந்த இயந்திரங்களை கள அளவில் இயக்க, தொழிலாளர் ஊழியர்படை உறுப்பினர்களின் சேவை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. அதன்படி, ஊழியர்படை உறுப்பினர்களுக்கு கொடுப்பனவு செலுத்தப்பட்டு, தேவையான சேவை வழங்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தின் கீழ் சேதமடைந்த 8 லட்சம் தென்னை மரங்களுக்கு சிகிச்சையளிக்கத் தேவையான 20,000 லீட்டர் வேப்பெண்ணெய், திரவ தெளிப்பான்களுக்கான பெட்ரோல் மற்றும் உராய்வு எண்ணெய் மற்றும் தொழிலாளர்களுக்கு செலவாகும் ஒதுக்கீடுகள் தென்னை பயிர்ச் செய்கை சபையால் வழங்கப்பட்டது.

அதன்படி, 2023.12.31க்குள் 2,919 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதோடு அதன்பயனாளிகளின் எண்ணிக்கை 82,634 ஆகும்.மேலும், வெள்ளை ஈ தாக்கிய 949,612 தென்னை மரங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

**அட்டவணை இலக்கம் 1.6: 2023.12.31ஆம் திகதியில் வெள்ளை ஈ சேதத்தை கட்டுப்படுத்துவது தொடர்பான முன்னேற்றம்**

| தொ.இ | பிராந்திய அலுவலகம் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | சிகிச்சையளிக்கப்பட்ட மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | கம்பஹா | 445 | 11,036 | 128,862 |
| 2 | களுத்துறை | 195 | 9,764 | 61,880 |
| 3 | கேகாலை | 109 | 5,383 | 135,130 |
| 4 | குருநாகல் | 690 | 12,152 | 174,950 |
| 5 | மாத்தளை | 250 | 5,116 | 35,048 |
| 6 | காலி | 401 | 6,422 | 65,231 |
| 7 | மாரவில | 124 | 6,774 | 200,108 |
| 8 | குளியாப்பிட்டி | 46 | 2,051 | 102,988 |
| 9 | மாத்தறை | 219 | 9,209 | 13,598 |
| 10 | ஹம்பாந்தோட்டை | 76 | 2,026 | 12,239 |
| 11 | இரத்தினபுரி | 160 | 6,016 | 1,508 |
| 12 | அம்பாறை | 33 | 1,063 | 2,083 |
| 13 | மட்டக்களப்பு | 8 | 274 | 4,360 |
| 14 | மொனராகலை | 24 | 957 | 210 |
| 15 | அனுராதபுரம் | 24 | 589 | 3,356 |
| 16 | பொலன்னறுவை | 61 | 1,121 | 3,138 |
| 17 | வவுனியா | 17 | 827 | 2,390 |
| 18 | திருகோணமலை | 9 | 345 | 1,070 |
| 19 | யாழ்ப்பாணம் | 28 | 1,509 | 1,463 |
| மொத்தம் | | **2,919** | **82,634** | **949,612** |

### 1.1.7.ப்ரோண்டிஸ்பா

தென்கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் பசுபிக் தீவுகளில் பொதுவாகப் பதிவாகும் ப்ரோண்டிஸ்பா பூச்சித் தாக்குதல், இந்த ஆண்டு மார்ச் மாதம் இலங்கையில் முதன்முதலில் பதிவாகியதோடுதென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின்படி, தென்னை பயிர்ச் செய்கைச் சபை 2023.03.09முதல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தொடங்கியது.

இதன்படி, காலி தொடந்துவ முதல் மாத்தறை கம்புருகமுவ கடற்கரைப் பகுதி வரையிலும் மற்றும் இந்தப் பிரதேசத்தின் கடற்கரைப் பகுதியில் இருந்து 01 கிலோமீற்றர் தரைப்பகுதி வரையிலும் காலி மாவட்டத்தின் தொடந்துவ, பூஸ்ஸ, லபுதூவ, அஹங்கம மற்றும் பேலஸ்ஸ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், மாத்தறை மாவட்டத்தின் மிதிகம மற்றும் கப்பரதொட்டை பிரதேச செயலகப் பிரிவுகளிலும்50 கி.மீ. தூரம் பரவியிருந்தது. ஆண்டின் இறுதியில், ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் சில இடங்களில் ப்ரோண்டிஸ்பா சேதம் பதிவாகியது.

இந்தப் பூச்சிக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு அமைச்சின் நிதி ஒதுக்கீடாக ரூ. 9.7 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன் 2023.12.31 ஆம் திகதியில் நிதி முன்னேற்றம் ரூ. 9.7 மில்லியன் ஆகும். 2023.12.31நிலவரப்படி, மாத்தறை, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 18,829 நோயுற்ற மரங்கள் இனங்காணப்பட்டதுடன், 17,927 நோயுற்ற மரங்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

**அட்டவணை இல. 1.7: 2023.12.31ஆம் திகதியில்ப்ரோண்டிஸ்பாசேதக் கட்டுப்பாடு தொடர்பான முன்னேற்றம்**

| தொ.இல | பிராந்திய அலுவலகம் | மரங்களை அடையாளப்படுத்தல் | | மொத்த அடையாளப்படுத்தல் | மரங்களுக்கு தடுப்பூசி போடுதல் | | மொத்த தடுப்பூசி ஏற்றல்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | CRI | CCB | | CRI | CCB | |
| 1 | காலி | 2,214 | 12,707 | 14,921 | 1,206 | 13,715 | 14,921 |
| 2 | மாத்தறை | - | 3,249 | 3,249 | - | 2,347 | 2,347 |
| 3 | ஹம்பாந்தோட்டை | - | 659 | 659 | - | 659 | 659 |
| | மொத்தம் | **2,214** | **16,615** | **18,829** | **1,206** | **16,721** | **17,927** |

## 1.2 விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டம்

ஒரு விவசாய சேவை வழங்குனராக, தென்னை பயிர்ச்செய்கை சபை அதன் வாடிக்கையாளரான தென்னை விவசாயிகளுக்கு தென்னை பயிர்ச்செய்கை தொடர்பான விஸ்தரிப்பு பற்றிய தகவல்களை கட்டாயம் வழங்க வேண்டும். இது சபையின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்றாகும். இது பின்வருமாறு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த கூட்டுத் திட்டத்திற்கு இணங்க, வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் மற்றும் தொடர்புடைய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அதற்குத் தேவையான ஒதுக்கீடு திட்டம் ஆகியவை உதவிப் பொது முகாமையாளரால் (விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்தி) மேற்கொள்ளப்படுவதோடு இதுவிஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளரின்உடன்பாடு மற்றும் மேற்பார்வையின் கீழ் செய்யப்படுகிறது. அதன்படி, இந்தத் தகவல்கள் அனைத்தும் எழுத்துப்பூர்வமாகவும், சுற்றறிக்கைகளாகவும் பிராந்திய அலுவலகங்களுக்கு அனுப்பப்படுவதோடுபிராந்திய முகாமையாளர்களால் அவர்களின் அதிகார எல்லையில் அபிவிருத்தி மற்றும் விஸ்தரிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. பிராந்திய முகாமையாளருக்கு மேலதிகமாக, உதவி பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் பண்ணை திட்டமிடல் அலுவலர்கள் மேற்பார்வை அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். அவர்களது முழுமையான மேற்பார்வையின் கீழ் தென்னை அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் கள அலுவலர்களின் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் ஆண்டுதோறும் மற்றும் மாதந்தோறும் ஏற்பாடு செய்யப்படுவதோடு இதற்குத் தேவையான முழுமையான ஆதரவு, வளங்கள் மற்றும் வழிகாட்டல்கள் தென்னை அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் விடயம்சார் அதிகாரிகளால் செய்யப்படுகிறது.

இது தவிர, தலைமை அலுவலகத்தின் விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு மற்றும் தகவல் பிரிவு ஆகியவை தேசிய அளவில் விஸ்தரிப்புச் சேவையை வழங்குகின்றன.

2023 ஆம் ஆண்டில், தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் விஸ்தரிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பின்வரும் நோக்கங்கள் பிரதானமாக இலக்காகக் கொள்ளப்பட்டன.

1. விஸ்தரிப்புத் திட்டத்திற்கு ஒருங்கமைவாக தென்னை பயிர்ச்செய்கையில் அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

2. தென்னை பயிர்ச்செய்கையில் பூச்சிகள் மற்றும் கிருமிகளால் ஏற்படும் சேதத்தைக் குறைத்தல்

3. வர்த்தக தென்னை நிலங்களின் அபிவிருத்தி.

4. பன்முக அணுகுமுறை மூலம் விவசாயிகளுக்கு பரந்த விஸ்தரிப்பு சேவையை வழங்குதல்.

2023 ஆம் ஆண்டில், தென்னை பயிர்ச்செய்கை சபை தீவு முழுவதும் 1,215 குழு விஸ்தரிப்புத் திட்டங்களை செயல்படுத்தியது. இது தவிர 69,740 தனிநபர் சந்திப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, 2023 ஆம் ஆண்டில், விவசாயிகளுடனான மொத்த சந்திப்புகளின் எண்ணிக்கை 97,035 ஆகும். இத்திட்டத்தின் நிதி முன்னேற்றம் ரூ.7.20 மில்லியன் ஆகும்.

**அட்டவணை இல.1.8. - 2023 இல் விஸ்தரிப்புத் திட்டத்தின் முன்னேற்றம்**

| பிராந்திய அலுவலகம் | தனிநபர் சந்திப்புகளின் முன்னேற்றம் | குழு விஸ்தரிப்பு திட்டங்களின் முன்னேற்றம் |
|---|---|---|
| மொனராகலை | 3,779 | 127 |
| மாத்தறை | 4,831 | 40 |
| குருநாகல் | 13,096 | 219 |
| குளியாப்பிட்டி | 6,278 | 46 |
| கேகாலை | 3,088 | 55 |
| கம்பஹா | 6,403 | 182 |
| களுத்துறை | 2,701 | 15 |
| மாரவில | 4,663 | 61 |
| இரத்தினபுரி | 475 | 89 |
| ஹம்பாந்தோட்டை | 3,020 | 36 |
| அனுராதபுரம் | 3,256 | 74 |
| திருகோணமலை | 1,468 | 46 |
| பொலன்னறுவை | 3,705 | 33 |
| அம்பாறை | 2,739 | 25 |
| மாத்தளை | 995 | 27 |
| காலி | 2,554 | 26 |
| மட்டக்களப்பு | 3,036 | 25 |
| யாழ்ப்பாணம் | 1,047 | 19 |
| வவுனியா | 2,170 | 20 |
| கண்டி | 436 | 50 |
| மொத்தம் | **69,740** | **1,215** |

## 1.3 தேசிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

தென்னை பயிர்ச் செய்கை சபையின் ஒட்டுமொத்த தேசிய விஸ்தரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தென்னை அபிவிருத்தி பயிற்சி நிலையம் மூலம் விஸ்தரிப்பு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படுகின்றன. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ், தென்னை பயிர்ச்செய்கைசபையின்அலுவலர்கள், தென்னை விவசாயிகள், விவசாயம் கற்கும் மாணவர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

2023 ஆம் ஆண்டில், தென்னை அபிவிருத்தி பயிற்சி நிலையம் கீழ்க்கண்டவாறு 3 முக்கிய துறைகளின் கீழ் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியுள்ளது.

**அட்டவணை இல. 1.9 - 2023 ஆம் ஆண்டில் தென்னை அபிவிருத்தி பயிற்சி நிலையத்தினால் நடத்தப்பட்ட விஸ்தரிப்பு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்**

| பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட | | முன்னேற்றம் | | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | தொகை ரூ. | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | தொகை ரூ. | |
| 1. விஸ்தரிப்பு அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 10 | 1,500,000.00 | 9 | 773,921.61 | 360 |
| 2. தொழில்நுட்பம் அல்லாத ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 5 | 1,000,000.00 | 4 | 395,692.75 | 172 |
| 3. தென்னை விவசாயிகள் மற்றும் வெளி தரப்பினருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 30 | 1,800,000.00 | 23 | 797,407.29 | 933 |
| 4. தென்னை பயிர்ச்செய்கை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - அச்சுவேலி | 12 | 300,000.00 | 14 | 300,000.00 | 860 |
| 5. தென்னை பயிர்ச்செய்கை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - மெதமுலன | 12 | 300,000.00 | 13 | 89,971.00 | 501 |

## 1.3.1 நோய் மற்றும் பூச்சி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

இங்கு, பிரதான பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாடு நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, அவற்றிற்குத் தேவையான இடுபொருட்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுவதோடுசேதக் கட்டுப்பாட்டு நிலைமைக்கு ஏற்ப, தனிப்பட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டு நிலைமையை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது.இந்த முக்கியமான நிகழ்ச்சித்திட்டங்கள் 2023 ஆண்டிலும் பின்வருமாறு செயல்படுத்தப்பட்டன.

**அட்டவணை இல. 1.10 - 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நோய் மற்றும் பூச்சி முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்**

| நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித்திட்டங்களின்/ அலகுகளின் எண்ணிக்கை | முன்னேற்றம் | மதிப்பிடப்பட்ட தொகை | முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| 01. ஒருங்கிணைந்த செவ்வண்டு முகாமைத்துவம் | ஒருங்கிணைந்த செவ்வண்டு கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் | 19 | 18 | 7,220,000.00 | 7,140,000.75 |
| | செவ்வண்டு பெரோமோன் உற்பத்தி மற்றும் விநியோகம் | 19,000 | 18,000 | 1,710,000.00 | 1,620,000.00 |
| | செவ்வண்டு பெரோமோன் விற்பனை | 5,000 | 7,057 | - | - |
| | மோனோக்ரோடாபஸ் விற்பனை (லீட்டர்) | 1,000 | 1,687.2 | - | - |
| 02. கருவண்டு கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் | கருவண்டு பெரோமோன் விற்பனை | 3,700 | 3,692 | | |
| 03. தென்னை கம்பளிப்பூச்சி கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | தென்னை கம்பளிப்பூச்சி கட்டுப்பாடு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 4 | 1 | 200,000.00 | 74,132.75 |
| | தென்னை கம்பளிப்பூச்சி ஒட்டுண்ணி குழாய்களின் உற்பத்தி மற்றும் விநியோகம் | 1,000 | 419 | 100,000.00 | 49,850.00 |
| 04.தென்னை மைட்டா பூச்சி கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் | மைட்டா கட்டுப்பாட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 19 | 13 | 2,510,000.00 | 1,601,551.04 |
| 05. ஏனைய நோய் மற்றும் பூச்சி கட்டுப்பாடு நிகழ்ச்சித் திட்டங்கள் | கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் | 5 | - | 200,000.00 | - |

## 1.3.2 விஸ்தரிப்பு மற்றும் வெகுசன ஊடக நிகழ்ச்சித்திட்டம்

தென்னை பயிர்ச்செய்கை சபையின் தேசிய விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒருங்கமைவாக தென்னை அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தினால் விஸ்தரிப்பு மற்றும் வெகுசன ஊடக நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தென்னை பயிர்ச்செய்கை சபை தொடர்பாகவும் அதன் மூலம் மேற்கொள்ளப்படும் விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாகவும்பொது மக்களை விழிப்புணர்வூட்டுதல், தென்னை பயிர்ச்செய்கை சபையின் விஸ்தரிப்பு அலுவலர்களின் விவசாய விஸ்தரிப்பு அறிவு மற்றும் மனோபாவ அபிவிருத்தி, தென்னை பயிர்ச்செய்கை சபையின் தேசிய விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான விஸ்தரிப்பு ஆதரவு உருவாக்கம், ஏற்பாடு மற்றும் விநியோகம் மட்டுமன்றி தேவையான ஏனைய ஆதரவுகள் வழங்கப்படுகின்றன.

**அட்டவணை இல. 1.11 - 2023 ஆம் ஆண்டில் தென்னை அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட விஸ்தரிப்பு மற்றும் வெகுசன ஊடக நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்**

| விபரம் | அலகு அளவு | தொகை (ரூ.) |
|---|---|---|
| www.cdtc.lk இணையத்தளபராமரிப்பு | 1 | 15,200.00 |
| சமூகஊடகத்தில் இடுகையிடுதலுக்குத்தேவையானவிளம்பரங்கள் | 35 | 0.00 |
| தேசிய அளவிலான கண்காட்சிகள் | 5 | 31,036.90 |
| பலகைகள்மற்றும்பதாதைகள் | 25 | 0.00 |
| வண்ண துண்டுப் பிரசுரங்களைஅச்சிடுதல் | 105,000 | 632,900.00 |
| செய்தித்தாள் வலயம் 2 | 200 | 30,000.00 |
| 10ஏக்கர்களுக்கு மேற்பட்டதென்னங் காணிஉரிமையாளர்களுக்கானதொழில்நுட்பஆலோசனை - சுற்றுப்பயணங்கள் | 20 | 0.00 |
| புதியவிஸ்தரிப்பாளர்பயிற்சி மொடியுள்களைசிங்களமொழிக்குமொழிபெயர்ப்புச் செய்தல் மற்றும் அச்சிடுதல் - மொடியுள் | 1 | 25,000.00 |
| புதியவிஸ்தரிப்பாளர்பயிற்சி மொடியுள்களைசிங்களமொழிக்குமொழிபெயர்ப்புச் செய்தல் மதிப்பீடு - செயலமர்வுகள் | 1 | 183,875.00 |
| கூட்டங்கள் மற்றும் விழாக்கள் | 14 | 821,336.08 |

## 1.4 "கப்ருக்கமுதலீடு" கடன் திட்டம்

"கப்ருக்க முதலீடு" கடன் திட்டமானதுதென்னைப் பயிர்ச்செய்கைச் சபையினால்1998 ஆம் ஆண்டு முதல்நாட்டின் முன்னணி நிதி நிறுவனங்களின் பங்களிப்புடன் தென்னை பயிர்ச் செய்கை விவசாயிகளின் காணி அபிவிருத்திக்குத் தேவையான நிதியுதவி மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்குவதற்காகநடைமுறைப்படுத்தப்படுகின்றஒரு சலுகைக் கடன் திட்டமாகும்.

கடனுதவித்திட்டத்தின்ஊடாகபயிர்ச்செய்கையாளர்களின் தென்னங் காணிகளில் முழுமையான பண்ணை அபிவிருத்தியின் மூலம் தென்னங் காணிகளுடன் தொடர்புடைய வணிக விவசாயத்தை ஊக்குவித்தல், காணிகளின் உற்பத்தித்திறன் மற்றும் வருமானத்தை அதிகரித்தல், அதன்மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு தென்னை பயிர்ச்செய்கை துறையின் பங்களிப்பை அதிகரித்தல், தென்னை பயிர்ச்செய்கையாளர்கள் மற்றும் தொழில்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் வருமான நிலையை அதிகரித்தல் எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கடன் திட்டத்திற்காக தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையுடன் இணைந்து மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கிஆகிய அரச வர்த்தக வங்கிகளும்,பிரதேசஅபிவிருத்தி வங்கி, சனச அபிவிருத்தி வங்கி மற்றும் தேசிய அபிவிருத்தி வங்கி ஆகிய அபிவிருத்தி வங்கிகளும்மற்றும் ஹட்டன் நெஷனல் வங்கி, செலான் வங்கி, கொமர்ஷல் வங்கி, சம்பத் வங்கி மற்றும் யூனியன் வங்கி போன்ற தனியார் வர்த்தக வங்கிகளும் ஒப்பந்தத் தரப்புகளாக கடன் நிதியுதவி வழங்கும் நடவடிக்கைகளில் பங்களிக்கின்றன.

இதன் மூலம் தென்னங் காணிகளின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய புதிய பயிர்ச் செய்கை, மீள் நடவு, காணி புனரமைப்பு, ஊடுபயிர்ச் செய்கை, கால்நடை வளர்ப்பு, நீர் வழங்கல் அமைப்புகளை நிறுவுதல், விவசாய இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் ஊடுபயிர் நாற்றங்கால்களை நிறுவுதல் போன்ற அபிவிருத்திப் பணிகளுக்கு சலுகை வட்டி விகிதத்தில் நிதி வசதிகள் வழங்கப்படும்.

இதன் மூலம் 8% வட்டி விகிதத்தில் கடன் நிதியுதவி வழங்கப்படுவதோடு வெற்றிகரமாக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்குமுதலாவது ஆண்டு தொடக்கம் ஐந்தாவது ஆண்டு வரை 100%, 50%என்றவாறுவட்டி சலுகை வெளியீடுகள்

வழங்கப்படுகின்றன. அதன்மூலம் பயனுள்ள வட்டி விகிதம் 3.5% போன்ற குறைந்த வட்டி விகிதத்தில் நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு வெற்றிகரமான விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த கடன் நிதியுதவியுடன் இணைந்து இலவச தொழில்நுட்ப ஆலோசனை சேவைகள் மற்றும் கடன் கருத்திட்ட தயாரிப்பு ஆகியவை மேற்கொள்ளப்படுவதோடுஇது விவசாயிகளுக்கு அவர்களின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குத் தேவையான மேலதிக சேவைகளை வழங்கப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டில் அடையப்பட்ட முன்னேற்றத்தின் பிரகாரம், 586 விவசாயிகளுக்கு 3003 ஏக்கர் காணி அபிவிருத்திக்காக 430.49 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. அதற்காக இந்த ஆண்டில் 368.63 மில்லியன் ரூபாமீள்நிதியளிப்பு வசதிகள் அந்தந்த நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதோடுவிவசாயிகளுக்கு 16.87மி.ரூபாவிலான வட்டி நிவாரண வெளியீட்டு கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. இதன்படி இலக்குகளுக்கு ஒப்பீடாக ஒட்டுமொத்த முன்னேற்றம் சுமார் 95.03% ஆக அமைந்துள்ளது.

அட்டவணை இல.1.12. 2023 ஆம் ஆண்டில் பிராந்திய அலுவலக மட்டத்தில் முன்னேற்றம்

| பிராந்திய அலுவலகம் | இலக்கு (ஏக்கர்) | முன்னேற்றம் (ஏக்கர்) |
|---|---|---|
| மொனராகலை | 96 | 75 |
| மாத்தறை | 110 | 89 |
| குருநாகல் | 245 | 221 |
| குளியாபிட்டிய | 325 | 260 |
| கேகாலை | 65 | 45 |
| கம்பஹா | 320 | 349 |
| களுத்துறை | 100 | 103 |
| மாரவில | 480 | 572 |
| இரத்தினபுரி | 160 | 182 |
| ஹம்பாந்தோட்டை | 170 | 171 |
| அனுராதபுரம் | 170 | 181 |
| திருகோணமலை | 100 | 38 |
| பொலன்னறுவை | 95 | 70 |
| அம்பாறை | 170 | 119 |
| மாத்தளை | 90 | 62 |
| காலி | 150 | 153 |
| மட்டக்களப்பு | 100 | 56 |
| யாழ்ப்பாணம் | 132 | 180 |
| வவுனியா | 62 | 57 |
| கண்டி | 20 | 20 |
| மொத்தம் | 3,160 | 3,003 |

**அட்டவணை இல. 1.13. - 2023 ஆம் ஆண்டில் நிதி நிறுவனங்களுக்கு மீள்நிதியளிப்பு வசதிகளை வழங்குவதில் முன்னேற்றம்**

| வங்கி | மீள்நிதியளிப்பு பெறுமதி (ரூ.) |
|---|---:|
| இலங்கை வங்கி | 84,734,978.00 |
| மக்கள் வங்கி | 57,301,316.00 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 130,191,880.00 |
| கொமர்ஷல் வங்கி | 51,920,200.00 |
| சம்பத் வங்கி | 7,400,750.00 |
| செலான் வங்கி | 12,666,231.00 |
| ஹட்டன் நெஷனல் வங்கி | 20,691,750.00 |
| யூனியன் வங்கி | 900,000.00 |
| சனச அபிவிருத்தி வங்கி | 1,325,000.00 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 1,500,000.00 |
| மொத்தம் | **368,632,105.00** |

"கப்ருக்க முதலீடு" கடன் திட்டம் தென்னை விவசாயிகள் மற்றும் பல்வேறு அதிகார சபைகளுக்கு மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதோடுஅதில், அதிகரித்து வரும் கடன் தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான நிதி ஒதுக்கீடுகளைப் பெறுதல், அதிகரித்து வரும் சேவைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான மனித வளங்களைப் பெறுதல்,அதன் மூலம், விவசாயிகளின் எதிர்பார்க்கப்படும் சேவைகளை பாராட்டத்தக்க அளவில் வழங்குதல் என்பன எதிர்கால அபிவிருத்தி நோக்கங்களில் அடங்குகின்றன.

## 2.0 மாதிரி தென்னந்தோப்புகள் மற்றும் நாற்றங்கால் அபிவிருத்திப் பிரிவு

தென்னைப் பயிர்ச்செய்கை சபையானது பன்னிரண்டு (12) மாதிரி தென்னந்தோப்புகளைக் கொண்டுள்ளதோடு, அதில் எட்டு (8) மாதிரி தென்னந்தோப்புகள் வடமேல் மாகாணத்திலும், மூன்று (3) மாதிரி தென்னந்தோப்புகள் கிழக்கு மாகாணத்திலும் ஒன்று (1) வடக்கு மாகாணத்திலும் அமைந்துள்ளது.

**அட்டவணை இல. 2.1 சபையின் மாதிரி தென்னந்தோப்புகள் பற்றிய தகவல்கள்**

| மாதிரி தென்னந்தோப்பு | அமைந்துள்ள மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விவாசய காலநிலை வலயம் | நில பரப்பளவு (ஏக்கர்) |
|---|---|---|---|---|
| லேனவ | குருநாகல் | மல்சிறிபுர இப்பாகமுவ | இடைவெப்ப வலயம் | 483 |
| டேசிவெளி | குருநாகல் | வேஉட மாவத்தகம | இடை ஈர | 306 |
| கெர்ட்லேண்ட் | குருநாகல் | கந்தானே கெதர பன்னல | இடை ஈர | 405 |
| நாகன்சோலை | குருநாகல் | வன்னி ரஸ்நாயக்கபுர | இடைவெப்ப | 406 |
| ரன்தெனிய | குருநாகல் | வாரியபொல | இடைவெப்ப | 347 |
| மஹாயாய | குருநாகல் | மாகந்துர பன்னல | இடைவெப்ப | 331 |
| பளை | கிளிநொச்சி | தர்மகர்ணி பச்சிலைப்பளை | தாழ்நில உலர் | 492 |
| கொரை | அம்பாறை | திருக்கோவில் | தாழ்நில உலர் | 465 |
| போபிட்டிய | குருநாகல் | கு/போபிட்டிய பன்னல | இடை ஈர | 142 |
| பாசிக்குடா | மட்டக்களப்பு | கோரளைப்பற்று கல்குடாகிழக்கு | தாழ்நில உலர் | 238 |
| கொஹொம்பான | அம்பாறை | உஹன | தாழ்நில உலர் | 152 |
| முந்தல் | புத்தளம் | முந்தல் | இடைவெப்ப | 14 |
| மொத்தம் | | | | **3,781** |

மாதிரி தென்னந்தோப்புகளில் இருந்து 2023 ஆம் ஆண்டில் 4,986,561 தேங்காய் அறுவடை கிடைத்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் அறுவடை செய்யப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை 6,508,111 என்பதோடு அதனுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டின் அறுவடை 1,521,550 தேங்காய்களினால் குறைந்துள்ளது. பல ஆண்டுகளாக உரம் இடப்படாமை, தட்பவெப்ப நிலைகள் மற்றும் வெள்ளை ஈக்கள் / மைட்டா போன்ற பூச்சிகளின சேதங்கள் இதற்குக் காரணமாக அமைந்துள்ளன.

இந்த மாதிரி தென்னந்தோப்புகள் அனைத்திலும் பிரதான பயிராக தென்னைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இந்த மாதிரி தென்னந்தோப்புகளின் உற்பத்தித்திறனை அதிகரிக்க தென்னைப் பயிர்ச் செய்கையுடன் ஊடுபயிர் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் தேங்காய் சார்ந்தபெறுமதி கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. அதன்படி, கொப்பரை உற்பத்தி, தென்னை நார் உற்பத்தி, தேங்காய் சிரட்டை சார்ந்த தயாரிப்புகள், தேங்காய் மட்டை சார்ந்த பொருட்கள், தேங்காய் எண்ணெய் உற்பத்தி, தென்னை மரக்கன்று உற்பத்தி ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. இது தவிர, மாதிரி தென்னந்தோப்புகளின் அமைவிட அமைப்புகளின் பிரகாரம் மற்றும் தென்னைப் பயிர்ச் செய்கையின் முன்னேற்றம் என்பவற்றுடன் தொடர்பான கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இரைவிழுங்கி மைட்டா உற்பத்தி, கப்துருபாய விற்பனை நிலையங்களைப் பேணிச் செல்லல், அதிகாரி/சுற்றுலா பங்களாக்களை நிறுவுதல் ஆகியவை அக் கருத்திட்டங்களாகும்.


வருமான பிறப்பாக்கத்தினை உயர்த்துவது இக் கருத்திட்டங்களின் முக்கிய நோக்கமாக அமைந்ததுடன் இதுதவிர, மாதிரி தென்னந்தோப்பு வளர்ப்பாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தென்னை தொடர்பான பாடநெறிகளைப் பயிலும் மாணவர்கள், அரசு மற்றும் தனியார் நிறுவன ஊழியர்கள், விவசாய அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோருக்கு பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தி தேவையான அறிவை வழங்குவது சேவையாக மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த ஆண்டு தென்னை சாகுபடி வாரியத்திற்குச் சொந்தமான 12 மாதிரி தென்னை தோட்டங்களிலிருந்து ஈட்டப்பட்ட வருமானம் ரூ.380.40 மில்லியன் ஆகும். 12 மாதிரி தென்னை தோட்டங்களின் செலவு ரூ.317.27 மில்லியன் ஆகும். அதன்படி 12 மாதிரி தென்னை தோட்டங்களின் லாபம் ரூ.63.13 மில்லியன் ஆகும். இதிலிருந்து மாதிரி தென்னை தோட்டத்துறை தொடர்பான செலவு ரூ.42.737 மில்லியன் கழிக்கப்படுகிறது. மாதிரி தென்னை தோட்டத்துறையின் மொத்த நிகர லாபம் ரூ.20.39 மில்லியன் ஆகும்.


**அட்டவணை இல. 2.2 மாதிரி தென்னந்தோப்புகளில் தேங்காய் விளைச்சல், வருமானம், செலவு மற்றும் இலாபம் (ஏல விற்பனை, கறித் தேங்காய் விற்பனை, விதை தேங்காய் பெறுமதி மற்றும் கொப்பரை பெறுமதி உட்பட)**

| மாதிரி தென்னந்தோப்பு | ஆண்டு இலக்கு | ஆண்டு உற்பத்தி | வருமானம் | செலவினம் | இலாபம் | COP | NSA | ஒரு காயின் இலாபம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (காய்கள்) | (காய்கள்) | (ரூ.) | (ரூ.) | (ரூ.) | | | |
| லேனவ | 936,000 | 890,430 | 52,971,202 | 26,685,760 | 26,285,442 | 29.97 | 59.49 | 29.52 |
| டேசிவெளி | 880,000 | 600,102 | 43,093,810 | 25,028,860 | 18,064,950 | 41.71 | 71.81 | 30.10 |
| கெர்ட்லேண்ட் | 821,100 | 658,928 | 42,034,590 | 21,352,628 | 20,681,962 | 32.41 | 63.79 | 31.39 |
| நாகன்சோலை | 690,000 | 527,614 | 54196613.17 | 32325134.61 | 21,871,479 | 61.27 | 102.72 | 41.45 |
| ரன்தெனிய | 740,000 | 551,060 | 32,456,645 | 19,559,722 | 12,896,923 | 35.49 | 58.90 | 23.40 |
| மஹாயாய | 930,000 | 657,208 | 39,063,973 | 20,792,659 | 18,271,314 | 31.64 | 59.44 | 27.80 |
| பளை | 270,000 | 202,820 | 12,124,857 | 7,174,193 | 4,950,664 | 35.37 | 59.78 | 24.41 |
| கொரை | 325,000 | 192,965 | 12,427,850 | 8,700,948 | 3,726,902 | 45.09 | 64.40 | 19.31 |
| போபிட்டிய | 325,000 | 227,685 | 12,838,096 | 10,679,818 | 2,158,278 | 46.91 | 56.39 | 9.48 |
| பாசிக்குடா | 260,000 | 166,998 | 10,773,003 | 8,966,080 | 1,806,923 | 53.66 | 64.48 | 10.82 |
| கொஹொம்பான | 244,000 | 249,999 | 16,508,201 | 7,352,813 | 9,155,388 | 29.41 | 66.03 | 36.62 |
| முந்தல் | 75,000 | 60,752 | 4,085,297 | 2,722,458 | 1,362,839 | 44.81 | 67.25 | 22.43 |
| மொத்தம் | **6,496,100** | **4,986,561** | **332,574,137.17** | **191,341,073.61** | **141,233,064** | **38.54** | **58.34** | **19.80** |

படம் 2.1 ஆண்டு தேங்காய் உற்பத்தி இலக்கு கீழே உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




படம் 2.2 மாதிரி தென்னந்தோப்புகளின் வருடாந்த தென்னை வருமானம், செலவினம் மற்றும் இலாபம் கீழே உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.



மாதிரி தென்னந்தோப்புகளில் 2023 ஆண்டில் கொப்பரை 87,307 கிலோ கிராம் உற்பத்தி செய்யப்பட்டதோடு அதன்மூலம் 29,306,026.00 ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. வருடாந்த செலவினம் 7,679,594.00 ரூபா என்பதோடு 21,626,432.00 ரூபா இலாபம் கொப்பரை உற்பத்தி மூலம் பெறப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதிரி தென்னந்தோப்புகளிலிருந்தும் 20,865 கிலோ கிரம் கரி உற்பத்தி செய்யப்பட்டதோடு அதன் மூலம் 1,529,639.00 ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. வருடாந்த செலவினம் 240,161.00 ரூபாவாக அமைந்ததோடு கரி உற்பத்தி மூலம் 1,289,478.00 ரூபா இலாபம் பெறப்பட்டுள்ளது.

## 2.1.2 விதை தேங்காய் உற்பத்தி

2023 ஆம் ஆண்டில் மாதிரி தென்னந்தோப்புகள் மூலம் 640,813 விதை தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டதோடு மாதிரி தென்னந்தோப்புகளின் படி அதன் விவரங்கள் அட்டவணை 2.3 மூலம் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை இல. 2.3 - 2023 ஆம் ஆண்டில் மாதிரி தென்னந்தோப்புகளில் உற்பத்தி செய்யப்பட்ட விதை தேங்காய்களின் அளவு**

| மாதிரி தென்னந்தோப்பு | உற்பத்தி செய்யப்பட்ட விதை தேங்காய்களின் அளவு (காய்கள்) |
|---|---|
| லேனவ | 107,473 |
| டேசிவெளி | 65,668 |
| கெர்ட்லேண்ட் | 64,543 |
| நாகன்சோலை | 51,989 |
| ரன்தெனிய | 61,301 |
| மஹாயாய | 51,430 |
| பளை | 43,000 |
| கொரை | 46,000 |
| போபிட்டிய | - |
| பாசிக்குடா | 57,700 |
| கொஹொம்பான | 72,059 |
| முந்தல் | 19,650 |
| மொத்தம் | **640,813** |

## 2.1.3 தேங்காய் மட்டை சில்லுகள் உற்பத்தி

முளை உற்பத்தியில் பயன்படுத்தப்படும் தென்னை நார்க்கு மாற்றாக தேங்காய் மட்டை சில்லுகளைப் பயன்படுத்தலாம். தென்னை நார் கொள்முதல் செய்வதற்கான வருடாந்த செலவைக் குறைப்பதற்காக, மாதிரி தென்னந்தோப்புக்குச் சொந்தமான தேங்காய் மட்டைகளில் இருந்து சிப்ஸ் வெட்டப்பட்டு, தென்னை நார்க்கு பதிலாக பயன்படுத்தப்படுவதோடு, பணத்திற்கு விற்கப்படுகிறது.

2023 ஆம் ஆண்டில், தென்னைப் பயிர்ச் செய்கை சபையின்நாகன்சோலை மாதிரி தென்னந்தோப்பு மற்றும் லேனவ மாதிரி தென்னந்தோப்பு ஆகியவற்றில் தேங்காய் மட்டைத் துண்டுகள் உற்பத்தி வருமானம் 1,800,200.00 ரூபா மற்றும் அதன் செலவு 734,194.52 ரூபாவாக அமைந்ததோடு 1,066,005.48 ரூபா இலாபம் கிடைத்துள்ளது.

2023 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட தென்னை நார் உற்பத்தி கருத்திட்டம் 03 மாதிரி தென்னந்தோப்புகளில் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு 6,438 கிலோ தென்னை நார் மற்றும் 276 கிலோ தென்னை நார்க் கழிவு உற்பத்தி செய்யப்பட்டது. அதன் மூலம் 3,088,475.00 ரூபா வருமானம் ஈட்டப்பட்டதோடு அதன் செலவு1,101,573.00 ரூபாவாக அமைந்திருந்த அதேவேளை 1,986,902.00 ரூபா இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

## <u>2.1.4 தென்னைப் பயிர்ச் செய்கை வேலைத்திட்டம்</u>

**(புதிய பயிர்ச் செய்கை, கீழ்ப் பயிர்ச் செய்கை, இடைவெளிகளைநடுதல்)**

2023 ஆம் ஆண்டில், புதிதாக தென்னைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல் மீள்/கீழ் நடவு மற்றும் தென்னைப் பயிர்ச் செய்கையின் இடைவெளிகளை (வெற்றிடங்களை) நடுதல் மூலம் தென்னைப் பயிர்ச் செய்கையை அதிகரிப்பதும் தற்போதுள்ள தென்னைப் பயிர்ச் செய்கையின் அடர்த்தியை அதிகரிப்பதும் மேற்கொள்ளப்பட்டன.

2023 ஆம் ஆண்டில், மாதிரி தென்னந்தோப்புகளில் நடப்பட்ட புதிய கன்றுகள் உட்பட 25 ஏக்கர்களில் 2,750 தென்னை மரக்கன்றுகள் புதிதாக பயிரிடப்பட்டுள்ளது. சபையின் அனைத்து மாதிரி தென்னந்தோப்புகளிலும் வெற்றிடங்களை நிரப்பிய கன்றுகள் மற்றும் கீழ்ப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள கன்றுகளின் எண்ணிக்கை 50,270 ஆகும்.

## <u>2.1.5 மாதிரி தென்னந்தோப்புகளில் கள நடவடிக்கைகள்</u>

மாதிரி தென்னந்தோப்புகளில் காய்களைக் கொண்டுள்ள செய்கை மற்றும் மரக்கன்று செய்கையில் மேற்கொள்ளப்படும் கள நடவடிக்கைகள் மூலம் தென்னைப் பயிர்ச் செய்கை நிலத்தின் பௌதீக, உயிரியல் மற்றும் இரசாயனத் தன்மையை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் மண் அரிப்பைத் தடுத்தல், மண்ணின் ஈரப்பதனைப் பாதுகாத்தல் இந்த நடவடிக்கைகள் மூலம் மேற்கொள்ளப்படுவதோடு நோய்கள் மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் செய்கையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும்

மேற்கொள்ளப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் ஒவ்வொரு கள நடவடிக்கையின் முன்னேற்றமும் கீழே காட்டப்பட்டுள்ளது.

### 2.1.5.1 வீதிகள் மற்றும் மதகுகள்

அனைத்து மாதிரி தென்னந்தோப்புகளிலும் 19,340 மீட்டர் வீதிகள் மற்றும் மதகுகள் சீரமைக்கப்பட்டுள்ளதோடு மாதிரி தென்னந்தோப்புகளின் பிரகாரம் முன்னேற்றம் 19,340 மீட்டர்களாகும்.

மாதிரி தென்னந்தோப்புகளின் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட வேலிகளின் அளவு 43,434 மீட்டர்கள் ஆகும்.

### 2.1.5.2 களைக் கட்டுப்பாடு

மாதிரி தென்னந்தோப்புகளில் களைக் கட்டுப்பாடு ஆனது 4 வழிகளில் அதாவது, தொழிலாளர்கள், இரசாயனங்கள், இயந்திர முறைகள் மற்றும் விலங்குகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. ஆண்டு முழுவதும் அவ்வப்போது 5,384 ஏக்கர்களில் களைக் கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டது.

### 2.1.5.3 வடிகால்களை அமைத்தல், மட்டைகளைப் புதைத்தல்

தென்னந்தோப்பில் காணப்படுகின்ற ஈரப்பதத்தை பாதுகாக்கும் வகையில், சமச்சீர் (காண்டூர்) வடிகால்களை அமைத்தலும் மட்டைக் குழிகளை அமைத்தலும் உபரி நீர் வழிந்தோட நீர் வழிந்தோடும் வடிகால்களை அமைத்தலும் மேற்கொள்வதோடு 2023 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வடிகால்கள், திருத்தப் பணிகள் மற்றும் மட்டைக் குழிகளை அமைத்தல் என்பவற்றின் முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை இல. 2.4 தென்னைப் பயிர்ச் செய்கையில் வடிகால்களை அமைத்தல் மற்றும் மட்டைகளைப் புதைத்தல்**

| மாதிரி தென்னந்தோப்புகள் | சமச்சீர் வடிகால்களை அமைத்தல் மற்றும் திருத்துதல் (மீட்டர்) | நீர் வடிகால்களை அமைத்தல் மற்றும் திருத்துதல் (மீட்டர்) | மட்டைகளைப் புதைத்தல் (குழிகளின் எண்ணிக்கை) |
|---|---|---|---|
| லேனவ | - | - | 750 |
| டேசிவெளி | 2,775 | - | 582 |
| கெர்ட்லேண்ட் | - | 909 | 35 |
| நாகன்சோலை | - | 1,008 | 300 |
| ரன்தெனிய | 1,370 | - | 741 |
| மஹாயாய | - | - | 800 |
| பளை | - | - | 300 |
| கொரை | - | 2,240 | 522 |
| போபிட்டிய | - | - | - |
| பாசிக்குடா | - | - | 60 |
| கொஹொம்பான | - | 1,060 | 122 |
| முந்தல் | 525 | - | 28 |
| மொத்தம் | 4,670 | 5,217 | 4,240 |

### 2.1.5.4. <u>தழைக்கூளம் இடுதல், மூடு பயிர்ச் செய்கை மற்றும் உழுதல்</u>

2023 ஆம் ஆண்டில், மாதிரி தென்னந்தோப்புகளில் ஈரப்பதத்தை பாதுகாக்க தென்னை மரங்களைச் சுற்றி தழைக்கூளம் இடுவது ஒரு வருடத்தில் பல முறை செய்யப்படும். அதுமட்டுமின்றி, தென்னைப் பயிர்ச் செய்கையில் மூடு பயிர்ச் செய்கை மற்றும் உழுதல் என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றன. இது பின்வருமாறு அமைகின்றது.

- மாதிரி தென்னந்தோப்புகளில் உழுதல்1909 (ஏக்கர்கள்)

- தழைக்கூளம் இடுதல் 121461 மரங்கள்
- மூடு பயிர்ச் செய்கை 960 ஏக்கர்கள்

#### 2.1.5.5 சேதனப் பசளை இடுதல்.

மண்ணின் பௌதீக பண்புகளை மேம்படுத்துவதன் மூலமும், அதன் ஊட்டச்சத்து கூறுகளை அதிகரிப்பதன் மூலமும், மண்வாழ் உயிரினங்களின் செயல்பாட்டை மேம்படுத்துவதன் மூலமும், தென்னந்தோப்புகளின் மண்பாங்கின் நீண்டகால வளர்ச்சிக்காக சேதனப் பசளை பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்படுகின்றது. பிரதேசத்தில் இலகுவாக பெறக்கூடிய தன்மைக்கு ஏற்ப சேதனப் பசளையாக கோழி எரு, மாட்டெரு, செம்மறியாடு/ ஆட்டுப்புழுக்கை மற்றும் காம்போஸ்ட் ஆகியவை இடப்படுகின்றன. மாதிரி தென்னந்தோப்புகளுக்கு சேதனப் பசளை இடப்படும் முன்னெற்றத்தின் படி சேதனப் பசளை இடப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 5,614 என்பதோடுகிலோ கிராம் அளவு 62,140 ஆகும்.

### 2.1.6 ஊடுபயிர் நிகழ்ச்சித்திட்டம்

தென்னைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்களில் இடைவெளி விடப்படும் காரணமாக நிலத்தில் 2/3 பகுதி மிச்சப்படுவதோடு, இந்த இடப்பரப்பில் வேறு பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளலாம். 5 ஆண்டுகளுக்குக் குறைந்த மற்றும் 35 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தென்னங் செய்கையை தனிப் பயிர்ச் செய்கையாக மேற்கொள்ளும் நிலங்களில் ஊடு பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கான இயலுமை உள்ளது. அதன்படி, அந்த இடத்தைப் பயன்படுத்தி, குறுகிய கால பயிர்கள் மற்றும் நீண்ட கால பயிர்கள் புதிதாக செய்கை செய்யப்பட்டும், ஏற்கனவே உள்ள ஊடுபயிர்கள் பராமரிக்கப்பட்டும் வருகின்றது. குறுகிய கால காய்கறிகள், கிழங்கு வகைகள், மூலிகைகள், மசாலாப் பொருட்கள், பயறு வகைகள், தானியங்கள் மற்றும் பழப் பயிர்கள் ஊடு பயிர்களாக பயிரிடப்பட்டுள்ளன.

## 2.1.7 நெற் செய்கை

லேனவ, ரன்தெனிய, கிர்ட்லண்ட், மஹாயாய, கொஹொம்பான மற்றும் நாகன்சோலை மாதிரி தென்னந்தோப்புகளில் நெற் செய்கை திட்டம் 2023 இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதில் 72 ஏக்கர் 84 பேர்ச்சஸ்களில் நெற் செய்கை குத்தகை விவசாயிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டள்ளது. மொத்த நெற் செய்கை வருமானம் 2,989,409.00 என்பதோடு செலவு 552,180.00 ரூபாவாகும். அத்துடன் அதன் இலாபம் 2,437,228.00 ரூபாவாக காணப்பட்டதோடு உற்பத்தி செய்யப்பட்ட நெல்லின் அளவு 31,543 கிலோவாகும்.

## 2.1.8 விதை தேங்காய்களை பதியம் வைத்தல்

2023 ஆம் ஆண்டில் மாதிரி தென்னந்தோப்புகளில் விதை தேங்காய் பதியம் வைத்தலின் முன்னேற்றம் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.5 விதை தேங்காய் பதியம் வைத்தலின் முன்னேற்றம்**

| மாதிரி தென்னந்தோப்பு | விதை தேங்காய்களைப் பெறுதல் மற்றும் பதியம் வைத்தல் |
|---|---|
| | பானை நாற்றுகள் |
| லேனவ | - |
| டேசிவெளி | - |
| கெர்ட்லேண்ட் | - |
| நாகன்சோலை | 6,370 |
| ரன்தெனிய | - |
| மஹாயாய | 2,780 |
| பளை | 5,250 |
| கொரை | - |
| போபிட்டிய | - |
| பாசிக்குடா | 22,750 |
| கொஹொம்பான | 7,048 |
| முந்தல் | - |
| மொத்தம் | **44,198** |

2023 ஆம் ஆண்டில், மாதிரி தென்னந்தோப்புகளில் தென்னை நாற்றுமேடைகளில் நாற்று உற்பத்தியின் முன்னேற்றம் அட்டவணை 2.6 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை எண் 2.6** - தென்னை நாற்று உற்பத்தியின் முன்னேற்றம்

| மாதிரி தென்னந்தோப்பு | தரைநாற்றுகள் | | பானை நாற்றுகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | சிறு போகம் | பெரும்போகம் | சிறு போகம் | பெரும்போகம் | |
| லேனவ | - | - | - | - | - |
| டேசிவெளி | - | - | - | - | - |
| கெர்ட்லேண்ட் | - | - | - | - | - |
| நாகன்சோலை | - | - | 6,370 | - | 6,370 |
| ரன்தெனிய | - | - | - | - | - |
| மஹாயாய | 3,251 | - | - | 2,780 | 6,031 |
| பளை | - | - | - | - | - |
| கொரை | 5,587 | 32,694 | 14,396 | 1,340 | 54,017 |
| போபிட்டிய | - | - | - | - | - |
| பாசிக்குடா | - | - | 6,000 | 1,000 | 7,000 |
| கொஹொம்பான | - | - | - | 7,048 | 7,048 |
| முந்தல் | - | - | - | - | - |
| மொத்தம் | **8,838** | **32,694** | **26,766** | **12,168** | **80,466** |

2023 ஆம் ஆண்டில் மாதிரி தென்னந்தோப்புகள் மூலம் தென்னை நாற்றுகளை விநியோகித்ததன் முன்னேற்றம் அட்டவணை 2.7 இல் காட்டப்பட்டுள்ளதுடன் அட்டவணை இல். 2.8 இல் வருமானம் மற்றும் செலவினங்களின் முன்னேற்றமும் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை இல.2.7-நாற்றுகளை விநியோகித்ததன் முன்னேற்றம்

| மாதிரி தென்னந்தோப்பு | விநியோகிக்கப்பட்ட தென்னை நாற்றுகளின் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|
| | தரை நாற்றுகள் | பானை நாற்றுகள் | |
| லேனவ | 78,965 | 30,374 | 109,339 |
| டேசிவெளி | 61,144 | 32,584 | 93,728 |
| கெர்ட்லேண்ட் | 30,122 | 13,012 | 43,134 |
| நாகன்சோலை | 5,200 | 38,561 | 43,761 |
| ரன்தெனிய | 587 | 25,784 | 26,371 |
| மஹாயாய | 25,094 | 306 | 25,400 |
| பளை | 93,567 | 9,139 | 102,706 |
| கொரை | 34,981 | 2,671 | 37,652 |
| போபிட்டிய | 20,659 | 3,961 | 24,620 |
| பாசிக்குடா | 135,315 | 6,966 | 142,281 |
| கொஹொம்பான | 67,206 | 46,824 | 114,030 |
| முந்தல் | 25,894 | 1,346 | 27,240 |
| மொத்தம் | **578,734** | **211,528** | **790,262** |

அட்டவணை 2.8 - தென்னை நாற்றுகளின் உற்பத்தி வருமானம், செலவு மற்றும் இலாபம்

| மாதிரி தென்னந்தோப்பு | வருமானம் (ரூ.) | செலவு (ரூ.) | இலாபம் (ரூ.) |
|---|---|---|---|
| லேனவ | 17,246,540.00 | 1,245,061.26 | 16,001,478.74 |
| டேசிவெளி | 20,756,875.00 | 952,480.87 | 19,804,394.13 |
| கெர்ட்லேண்ட் | 6,313,324.00 | 683,617.80 | 5,629,706.20 |
| நாகன்சோலை | 12,489,925.00 | 1,073,400.00 | 11,416,525.00 |
| ரன்தெனிய | 7,837,925.00 | - | 7,837,925.00 |
| மஹாயாய | 4,933,675.00 | 133,445.00 | 4,800,230.00 |
| பளை | 19,115,925.00 | 1,551,185.00 | 17,564,740.00 |
| கொரை | 6,922,975.00 | 643,851.07 | 6,279,123.93 |
| போபிட்டிய | 4,768,525.00 | 267,209.00 | 4,501,316.00 |
| பாசிக்குடா | 19,710,600.00 | 925,646.00 | 18,784,954.00 |
| கொஹொம்பான | 14,382,000.00 | 2,039,806.00 | 12,342,194.00 |
| முந்தல் | 4,935,250.00 | 167,302.00 | 4,767,948.00 |
| மொத்தம் | **139,413,539.00** | **9,683,004.00** | **129,730,553.00** |

## 2.1.9கால்நடை வளர்ப்புத் திட்டம்

தென்னையை ஒற்றைப் பயிராகப் பயிரிடுவதைப் பார்க்கிலும், தென்னைப் பயிர்ச் செய்கையுடன் ஊடு பயிர்ச் செய்கை மற்றும் கால்நடை வளர்ப்பு மேற்கொள்வதானது மாதிரி தென்னந்தோப்பு நிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது. மாதிரி தென்னந்தோப்பில் காணப்படும்இயலாற்றலின் அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்பட்ட கால்நடை வளர்ப்பு கருத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதோடு, அதன் கீழ் பசுமாடுகள், எருமைகள், ஆடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. கால்நடை உற்பத்தித் திட்டத்தின் கீழ், திரவப் பால், தயிர், யோகட் ஆகியவை பிரதானமாகவும், பால் டோஃபி சிறிய அளவிலும் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதோடு

இனப்பெருக்க நடவடிக்கைகளுக்காக விலங்குகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு விற்கப்படுகின்றன. மாதிரி தென்னந்தோப்பிற்கான சேதனப் பசளைத் தேவையின் ஓரளவு இதன்மூலம் வழங்கப்படுகின்றது. பல்கலைக்கழக மாணவர்களின் செய்முறை ஆய்வுகளுக்கும்கால்நடை வளர்ப்பு கருத்திட்டங்கள் உதவிகரமாக உள்ளன.

**அட்டவணை 2.9 - 31.12.2023 நிலவரப்படி கால்நடை வளர்ப்புக் கருத்திட்டங்களின் மொத்த வருமானம், செலவு மற்றும் இலாபம்**

| கால்நடை வளர்ப்புக் கருத்திட்டம் | வருமானம் (ரூ.) | செலவு (ரூ.) | இலாபம் (ரூ.) |
|---|---|---|---|
| | 15,579,059.00 | 7,530,167.00 | 8,048,892.00 |

### 2.1.10 இரைவிழுங்கி மைட்டா உற்பத்தி மற்றும் மாதிரி தென்னந்தோப்புகளில் பயன்பாடு.

மாதிரி தென்னந்தோப்புகளில் உள்ள மைட்டா பூச்சிகளின் சேதம் விளைச்சலில் தெளிவான குறைப்பை ஏற்படுத்துகிறது. காய்கள் சிறியதாக அமைவதும், காய்களின் தரம் குறைவதும், அறுவடை குறைவதும் மைட்டா பூச்சி சேதத்தால் ஏற்படுகின்றது. அத்துடன் மட்டைகளின் அளவு சிறியதாக அமைவதால் மட்டைகளை அகற்றுவது கடினமாக அமைதல், மட்டைகளின் வருமானம் குறைவடைதல் காரணமாக தேங்காய் அறுவடையின் வருமானம் குறைகிறது. மைட்டாக்களை உயிரியல் ரீதியான முறைகளின் மூலம் கட்டுப்படுத்துவதற்காக இரைவிழுங்கி மைட்டாக்கள் பயன்படுத்தப்படுவதோடு சபையின் மாதிரி தென்னந்தோப்புகள் மற்றும் நாற்றங்கால் அபிவிருத்திப் பிரிவின் கீழ் இயங்கி வந்த 10 ஆய்வகங்கள் காணப்பட்டன.

மாதிரித் தென்னந்தோப்புகளில் மைட்டா பூச்சிகளைக் கட்டுப்படுத்த இரைவிழுங்கி பூச்சிகள் பயன்படுத்தப்பட்டதோடு அதன் முன்னேற்றம் அட்டவணை 2.10 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.10 மாதிரி தென்னந்தோப்புகளில் இரைவிழுங்கி பூச்சிகளின் பயன்பாடு

| மாதிரி தென்னந்தோப்பு | பயன்படுத்தப்பட்ட இரைவிழுங்கி மைட்டா பூச்சிகளின் பக்கெட்டுகளின் எண்ணிக்கை |
|---|---|
| லேனவ | - |
| டேசிவெளி | 14,842 |
| கெர்ட்லேண்ட் | 8,000 |
| நாகன்சோலை | 5,050 |
| ரன்தெனிய | 1,700 |
| மஹாயாய | 3,000 |
| பளை | 1,376 |
| கொரை | 4,220 |
| போபிட்டிய | 4,500 |
| பாசிக்குடா | 2,600 |
| கொஹொம்பான | 1,100 |
| முந்தல் | - |
| மொத்தம் | **46,388** |

## 2.1.11கப்துருபயா விற்பனை நிலையங்கள் கருத்திட்டம்

தென்னைப் பயிர்ச் செய்கைசபையினால் உற்பத்தி செய்யப்படும் பயிர்கள், பொருட்கள், தென்னைப் பயிர்ச் செய்கை தொடர்பான உற்பத்திகளை விற்பனை செய்வதை முதன்மை நோக்கமாகக் கொண்டு கப்துருபாய வர்த்தக நிலையங்கள் தொடங்கப்பட்டன. கப்துருபாய வர்த்தக நிலையங்களில் உயர்தர தென்னைசார் உற்பத்திப் பொருட்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

## 2.1.12 உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ இல்ல கருத்திட்டம்

**அட்டவணை இல. 2.11 உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களின் விவரங்கள் - 2023**

| தொ.இல | உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள் | முகவரி |
|---|---|---|
| 01 | உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ இல்லம் - பாசிக்குடா | பாசிக்குடா மாதிரி தேன்னந்தோப்பு, பாசிக்குடா, கல்குடா |
| 02 | உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ இல்லம் - பளை | பளை மாதிரி தென்னந்தோப்பு, கண்டி வீதி, பளை |
| 03 | உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ இல்லம் - போபிட்டிய | போபிட்டிய மாதிரி தென்னந்தோப்பு, கு/போபிட்டிய |
| 04 | உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ இல்லம்-கொஹொம்பான | கொஹொம்பான மாதிரி தென்னந்தோப்பு, கொனாகொல்ல, கொஹொம்பான |
| 05 | உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ இல்லம் - ஹந்தபானகல | ஹந்தபானகல மாதிரி தென்னந்தோப்பு நாற்றங்கால், ஹந்தபானகல, வெஹெரயாய. |
| 06 | உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ இல்லம்-கட்டுகெலியாவ | மஹிலா மாவத்தை, கட்டுகெலியாவ, அனுராதபுரம் |
| 07 | உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ இல்லம்-கதிர்காமம் | கோகோவிலா சுற்றுலா இல்லம், தென்னைப் பயிர்ச்செய்கை சபை, டிப்போ வீதி, கதிர்காமம். |
| 08 | உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ இல்லம்-கும்புறுப்பிட்டி | கும்புறுப்பிட்டி தென்னந்தோப்பு நாற்றங்கால், கும்புறுப்பிட்டி, திருகோணமலை. |
| 09 | புலதிசி கோகோவிலா | உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ இல்லம், தென்னைப் பயிர்ச்செய்கை சபை, கலஹகல வீதி, புதிய நகரம், பொலன்னறுவை |

# 2.2 தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் நாற்றங்கால் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

## 2.2.1.தென்னங் கன்று உற்பத்தியும்கன்றுகளைவழங்கும்நிகழ்ச்சித்திட்டமும்

நாட்டில் பயிரிடுவதற்குத் தேவையான உயர்தர தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்குவது தென்னைப் பயிர்ச் செய்கை சபையின்பிரதான பணிகளில் ஒன்றாகும். விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவின் திட்டங்களின்படி, வருடத்தில் கன்றுகளின் உற்பத்திக்குத் தேவையான விதைகளை நாற்றங்கால்களுக்கு வழங்குதல், திட்டமிடுதல், நெறிப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு, கன்று உற்பத்தி ஆகியவை மாதிரி தென்னந்தோப்பு மற்றும் நாற்றங்கால் அபிவிருத்திப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.தென்னங் கன்று உற்பத்திச் செயல்முறைக்கு அலுவலகங்கள்,நாற்றுமேடைகள், மாதிரி தென்னந்தோப்புகள் மற்றும் நீர்கொழும்பு விதைத் தேங்காய் அலகு ஆகியவை முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன.

பிராந்திய முகாமையாளர்களின் வழிகாட்டுதல் மற்றும் விடுதி நாற்றுமேடைகளுக்குப் பொறுப்பான அலுவலர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ், தென்னை மரக்கன்றுகளை உற்பத்தி செய்வதை பிரதான பணியாகக் கொண்ட 36 தென்னங் கன்று நாற்றுமேடைகள் மூலமும் மாதிரி தென்னந்தோப்புகளுக்குப் பொறுப்பான முகாமையாளர்களின் நேரடி மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் 12 மாதிரி தென்னந்தோப்புகளில் தாபிக்கப்பட்டுள்ளதென்னங்கன்று நாற்று மேடைகள் மூலமும் செய்கையாளர்களுக்குத் தேவையான உயர்தர தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

நீர்கொழும்பு விதைத் தேங்காய் அலகு தென்னைப் பயிர்ச்செய்கை சபைக்குச் சொந்தமான நாற்றங்கால் மற்றும் மாதிரி தென்னந்தோப்புகளுக்குத் தேவையான உயர்தர விதைத் தேங்காய்களை வழங்குவதற்கான பிரதான மையமாக செயல்படுகிறது.

தென்னைச் செய்கையாளர்களுக்குத் தேவையான உயர்தர தென்னங்கன்றுகளை வினைத்திறனுடன் வழங்கும் நோக்கத்துடன், சபையின் தென்னந்தோப்பு நாற்றங்கால்கள் நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ளதுடன், அவற்றில் பெரும்பாலானவை தென்னைச் செய்கை மிகவும் பிரபலமான வடமேல் மாகாணத்தில் உள்ளன. பிராந்திய தென்னை மர

நாற்றங்கால்களின் செயல்பாடுகள் அந்தந்த பிராந்தியஅலுவலகங்களால் நிர்வகிக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

**2.2.1.1.தென்னை மரக்கன்றுகளின் இலக்கு**

2023 ஆம் ஆண்டை பொறுத்தமட்டில், தென்னைப் பயிர்ச்செய்கை சபை 03 மில்லியன் தென்னை மரக்கன்றுகளை உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளதுடன் அதன்படி, 2023 ஆம் ஆண்டிற்குத் தேவையான அளவு தென்னை மரக்கன்றுகளை உற்பத்தி செய்வதற்காக சபையின் நாற்றங்கால் மற்றும் மாதிரி தென்னந்தோப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த விதைத் தேங்காய்களின் அளவு 1207348ஆகும்.

இதில், சபைக்கான நாற்றங்கால்களுக்கு 1166680 விதைத் தேங்காய்களும், மாதிரி தென்னந்தோப்புகளுக்கு 31168 விதைத் தேங்காய்களும், சமுதாய நாற்றங்கால்களுக்கு 6000 விதைத் தேங்காய்களும், ஹதபிம அதிகாரசபைக்கு 3500 விதை தேங்காய்களும் வழங்கப்பட்டுள்ளன.

**2.2.2. விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

1. தியதொர மற்றும் ஹெட்டிபொல நாற்றங்கால்களில் தேனீப் பெட்டிகள் (குடியிருப்புகள்) பராமரிக்கப்படுகின்றன.
2. பல்லேகல தென்னை மரக்கன்று நாற்றங்கால் :-

I. உத்தியோகபூர்வ இல்லங்களில் வீட்டுத்தோட்டங்களை அபிவிருத்தி செய்தல்.
II. சேதனப் பசளை உற்பத்திக்கு 20 டன் காம்போஸ்ட்உற்பத்தி செய்யப்படுதல்.
III. 2023-2024 ஆகிய 2 ஆண்டுகளுக்காகபச்சை (அம்பன்) வாழை செய்கைக்கான GAP சான்றிதழ் பெறுதல்.
IV. 05 தேனீ வளர்ப்பு அலகுகளை நிறுவுதல்.
V. நாற்றங்கால் செக்ரோல் பணியாளர் நலன்புரி மற்றும் சிக்கன சங்கத்தை இற்றைப்படுத்தி நிதியளித்தல் மற்றும் வருடாந்த பணியாளர் மதிப்பீட்டினை நடத்துதல்.

## 2.2.3. சேதனப் பசளை உற்பத்தி

தொட்டி தென்னை மரக்கன்றுகளுக்கான தயாரிப்பின்போது, தற்போதுள்ள செய்கைகளுக்கு சேதனப் பசளை பெற்றுக்கொள்வதற்கும், இரசாயனப் பசளைக்காக உறப்படும் செலவை குறைத்துக் கொள்வதற்குமான நோக்கத்துடன்நாற்றங்கால்களில் கிடைக்கும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி, 36 நாற்றங்கால்களிலும் காம்போஸ்ட் பசளை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது.

## 2.2.4. திருத்தப் பணிகள்

1. தியதொரநாற்றங்காலின் வேலி மற்றும் நாற்றங்கால் பொறுப்பதிகாரியின்உத்தியோகபூர்வ இல்லத்தின் கழிவறைக் குழியைத் திருத்துதல்.
2. ஹெட்டிபொல நாற்றங்காலின் முன் வேலியை அகற்றி புதிய வேலியை நிர்மாணித்தல்.
3. பிங்கிரிய நாற்றங்காலின் வேலியைத் திருத்துதல்.
4. வென்னொருவை நாற்றங்காலின் உடைந்திருந்த வாவியின் நீர் வடிவழி மற்றும் கராஜின் கூரையைத் திருத்துதல்.
5. பொல்கஹவெல நாற்றங்காலில் மின்சார வேலியை அமைத்தல் மற்றும் RX-2267 ட்ரெய்லரை திருத்துதல்.
6. பல்லேகல நாற்றங்கால் அலுவலகத்திற்கும் 02 காவலர் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கும்03 குடிநீர் வசதிகளை பெற்றுக்கொள்ளல், ஒரு ஏக்கர் காணிக்கு தெளிப்பு நீர்ப்பாசன அமைப்பைத் தயாரித்தல்.
7. எம்பிலிப்பிட்டிய நாற்றங்காலில் தெளிப்பு நீர்ப்பாசன அமைப்பின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்தல், தகடு களஞ்சியத்தின் கூரையைத் தயாரித்தல், மற்றும் அலுவலகத்திற்கு தரைவிரிப்புகளையும் மேசைத்துணிகளையும் இட்டு வர்ணம் பூசுதல்.
8. கிரிந்திவெல நாற்றங்காலில்தெளிப்பு நீர்ப்பாசன அமைப்பை நிறுவுதல், உத்தியோகபூர்வ இல்லத்தின் குளியலறைக்கு டைல்ஸ் பதித்தல் மற்றும் அலுவலக கழிப்பறைக்கு டைல்ஸ் பதித்தல்.

9. எரமினிகொல்ல நாற்றங்காலில் கான்கிரீட் தூண்கள் மற்றும் கம்பிகள் இட்டு வேலியைஅமைத்தல்மற்றும் நாற்றங்காலின் கராஜை ஷீட் போட்டு திருத்துதல்.
10. உஹன நாற்றங்காலில் கை உழவு இயந்திரத்தைத் திருத்துதல்,பாதுகாப்பு வேலியைத் திருத்துதல்,தெளிப்பு நீர்ப்பாசன அமைப்பை நிறுவுதல் மற்றும் நீர் வழங்கல் அமைப்பைத் திருத்துதல்.
11. கும்புறுப்பிட்டி நாற்றங்காலுக்கு தெளிப்பு நீர்ப்பாசன அமைப்பினைநிறுவுதல்.
12. கொரொஸ்தூவ நாற்றங்காலில் உள்ள நாற்றங்கால் பொறுப்பதிகாரியின் உத்தியோகபூர்வ இல்லத்தின் உட்கூரையைத் திருத்துதல், ஒரு ஏக்கர் நிலத்திற்கு தெளிப்பு நீர்ப்பாசன அமைப்பை நிறுவுதல் மற்றும் கை உழவு இயந்திரத்தின் எஞ்சின் மற்றும் கூண்டினை பழுதுபார்த்தல்.

### 2.2.5. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்

1. தியதோர தென்னை நாற்றங்கால் நிலையம்குளியாப்பிட்டிய தொழில்நுட்பக் கல்லூரியில் விவசாய உற்பத்தி தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளோமா படிக்கும் மாணவிக்கு நாற்றங்காலில் களப் பயிற்சி மற்றும் அலுவலக ஆவணங்கள் பற்றிய பயிற்சியை நடத்துதல்.
2. ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞானப் பிரிவின் முதலாம் ஆண்டு மாணவிகளுக்கான பயிற்சித் திட்டத்தை வெலிபிட்டிய தென்னை நாற்றங்கால்நிலையத்தினால் நடாத்துதல்.
3. குண்டசாலை விவசாயக் கல்லூரியின் பயிலுனர்கள் 100 பேருக்கு பல்லேகல தென்னை நாற்றங்கால் நிலையத்தினால் ஒரு நாள் தென்னை பயிர்ச்செய்கை தொழில்நுட்பப் பயிற்சியை நடாத்துதல்.
4. எம்பிலிப்பிட்டிய தென்னை நாற்றங்கால்நிலையத்தினால் தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவு மற்றும் திப்பொல்கெட்டிய பிரிவுடன் இணைந்து பன்முக அணுகல் நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல்.

## 3.0 நிர்வாகம் மற்றும் மனித வள முகாமைத்துவப் பிரிவு

2023 ஆம் ஆண்டு திருமதி ஏ.வி. கே. மாதவி ஹேரத் அவர்கள் தென்னை பயிர்ச்செய்கை சபையின் தலைவராக பணியாற்றினார். இந்த ஆண்டில் 12 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

2023.07.06முதல் இதுவரை, திரு. டப்ளியூ.எம்.ஏ.பீ.விஜேசிங்க அவர்கள் பொது முகாமையாளர் பதவியில் பணியாற்றுகிறார்.

### 3.1 பதவியணிக் கட்டமைப்பு

2023 ஆம் ஆண்டில் சபையின் இலக்குகளை அடைய பின்வரும் பதவியணியினர் பங்களித்துள்ளனர்.

அட்டவணை இல.3.1 பதவியணிக் கட்டமைப்பு

| | |
|---|---|
| சிரேஷ்ட முகாமையாளர் | 02 |
| முகாமையாளர் | 36 |
| கனிஷ்டமுகாமையாளர் | 37 |
| செயல்படுத்தல்/ஆலோசனை சேவைகள் | 00 |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) | 224 |
| முகாமைத்துவஉதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) | 233 |
| ஆரம்பத் தரம் (தொழில்நுட்ப) | 36 |
| ஆரம்பத் தரம் (பகுதியளவுதொழில்நுட்ப) | 01 |
| ஆரம்பத் தரம் (தொழில்நுட்ப அல்லாத) | 65 |
| தற்போது பதவியை வைத்திருப்பவருக்கு மட்டுமே தனிப்பட்டதாக காணப்படும் பதவிகள் | 01 |
| தோட்ட நிர்வாக சேவையின் ஊழியர்கள் (நிரந்தரம்) | 90 |
| மொத்தம் | **725** |

### 3.2 ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு

2023 ஆம் ஆண்டில், உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கான புதிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டதோடு பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் (வி. அபி),

கணக்காளர் (நிதி), கணக்காளர் (மா.தெ.தோ), மற்றும் விடயம்சார் நிபுணர் (பயிர் பாதுகாப்பு) பதவிகளுக்கு அலுவலர்கள் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

### 3.3 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

2022 ஆம் ஆண்டில், சபையின் பல்வேறு பிரிவுகளில் பணிபுரியும் அதிகாரிகளின் அறிவு, மனப்பான்மை மற்றும் திறன்களை வளர்க்கும் நோக்கத்துடன் உள்நாட்டில் நடத்தப்படும் பல்வேறு கருத்தரங்குகள், பட்டறைகள், பயிற்சி மற்றும் பட்டப் படிப்புகளுக்காக 189 பேரை வெளி நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தி பயிற்சிக்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதோடு சபையின் அனுசரணையின் கீழ்பல்வேறு வள பங்களிப்புகள் மூலம் தென்னை அபிவிருத்திப் பயிற்சி நிலையத்துடன் இணைந்து 160 உத்தியோகத்தர்கள் உள்நாட்டு பயிற்சிப் பாடநெறிகள்/ பட்டறைகள் / கருத்தரங்குகளுக்குஆற்றுப்படுத்தப்பட்டுள்ளனர்.

அட்டவணை இல. 3.2 கூட்டு உள்நாட்டு பயிற்சி அமர்வுகள்

| கூட்டு உள்நாட்டு பயிற்சி அமர்வுகள் | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| எழுத்துப் பயிற்சி | 57 |
| மன அழுத்த முகாமைத்துவம் | 100 |
| வங்கி இணக்கக்கூற்றுக்கள்<br>தென்னை அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நடத்தப்படுதல் | 37 |
| HRM மாநாடு | 07 |
| செலவு மற்றும் கொடுப்பனவு நடைமுறை மற்றும் நிதிப் பிரமாணங்கள் பற்றிய பாடநெறி | 05 |
| புதிய வரிச் சட்டம் மற்றும் வருமான வரி பொறுப்பு கணக்கீடு | 04 |
| Advanced Excel<br>தென்னை அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நடத்தப்படுதல் | 43 |
| சேதஇழப்பு நி.பி.104 இன் கீழான விசாரணைகள் பற்றிய பாடநெறி | 02 |
| வேலை-வாழ்க்கை சமநிலை | 80 |
| மொத்தம் | 335 |

## 3.4 மனித வள முகாமைத்துவ முறைமை உருவாக்கம்

மனித வள முகாமைத்துவ முறைமை பூர்த்தி செய்யப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளது.

## 3.5 வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகள்

2023 ஆம் ஆண்டில், சபையின் 184 அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகளை நடத்தி முடிக்க முடிந்தது.

## 3.6 இளைப்பாறல்

வினைத்திறனுடன் சிறந்த சேவையை ஆற்றி தமது திறன்களையும் திறமைகளையும் சபையின் முன்னேற்றத்திற்காக தியாகம் செய்துதமது வயது நிறைவடைந்தமையினால்08 உத்தியோகத்தர்கள்/ஊழியர்கள் சபையின் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளனர். நிர்வாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவ பிரிவு இந்த உத்தியோகத்தர்கள் /ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய பணிக்கொடைகள் மற்றும் இதர சலுகைகளை குறித்த காலத்திற்குள் உடனடியாக வழங்க உரிய நடவடிக்கைகளை எடுத்தது.

## 3.7 போக்குவரத்து சேர்மம்

அட்டவணை இல3.3 - வாகன சுருக்கம் 2023

| | | |
|---|---|---|
| 01 | லாரிகள் | 17 |
| 02 | டபிள் கெப் வண்டிகள் | 45 |
| 03 | டிராக்டர் சக்கரங்கள்02 | 26 |
| 04 | டிராக்டர் சக்கரங்கள்04 | 50 |
| 05 | டிராக்டர் பெட்டிகள் | 90 |
| 06 | வேன் | 1 |
| 07 | பேருந்துகள் | 3 |
| 08 | ஜீப் | 4 |
| 09 | கார் | 6 |
| 10 | முச்சக்கர வண்டிகள் | 1 |
| 11 | மோட்டார் சைக்கிள் | 60 |
| 12 | பெக்கொ லோடர் | 2 |
| மொத்தம் | | 305 |

## 3.8 பெறுகை நடவடிக்கைகள்

தென்னை பயிர்ச்செய்கை சபையினால் மேற்கொள்ளப்படும் விஸ்தரிப்பு சேவைகளை தொடர்வதற்கும் தரத்தை அதிகரிப்பதற்கும் தேவையான மூலதன பொருட்கள் மற்றும் அச்சிடப்பட்ட உள்ளீடுகளை கொள்வனவு செய்தல், தென்னை மரக்கன்றுகள் உற்பத்திக்குத் தேவையான இடுபொருட்களை கொள்வனவு செய்தல், தலைமை அலுவலகம் மற்றும் பிற பிராந்திய அலுவலகங்கள், மாதிரி தென்னந்தோப்புகள் மற்றும் நாற்றங்கால்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் வினைத்திறன் மற்றும் விளைதிறனை அதிகரிப்பதற்குத் தேவையான மூலதன பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்கு 2023 ஆம் ஆண்டில் 113 மில்லியன் ரூபாவிலான கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 3.9 நிர்மாணம் மற்றும் கையகப்படுத்துதல்

சபையின் மூலதன சொத்துக்களை கையகப்படுத்துதல் மற்றும் மூலதன சொத்துக்களை பராமரித்தல் ஆகியவை இதன் கீழ் அடங்கும். அதன்படி, பின்வரும் நிர்மாண மற்றும் திருத்தப் பணிகளை2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ள முடிந்தது.

அட்டவணை இல3.4 - நிர்மாணம் மற்றும் கையகப்படுத்துதல் 2023

| பிராந்திய அலுவலகம் | தொடர் இலக்கம் | திருத்தம் |
|---|---|---|
| காலி | 01 | மைட்டா ஆய்வகத்தை ஒட்டிய கழிவறையை புதுப்பித்தல். |
| | 02 | பிராந்திய அலுவலகத்தின் பிரதான கதவு ஜன்னல்களின் திருத்தம். |
| | 03 | அம்பலாங்கொட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ இல்லத்தின் கூரை திருத்தம். |
| | 04 | பிரதான அலுவலக கட்டிடத்தின் கூரை திருத்தம். |
| | 05 | அலுவலகத்தில் 03 நிறைவேற்று அலுவலர் அறைகள் (Partition) பிரிக்கப்படுதல். |
| | 06 | 01ஆம் இலக்க உத்தியோகபூர்வ இல்லத்தின் கூரையைப் திருத்துதல். |
| நீர்கொழும்பு | 07 | பழைய கட்டிடத்தை புதுப்பித்தல். |
| களுத்துறை | 08 | சாப்பாட்டு அறையின் கூரையைதிருத்துதல். |
| | 09 | பிராந்திய அலுவலகத்தின் மதில்களை முழுமையாக திருத்துதல். |
| அம்பாறை | 10 | பிராந்திய அலுவலகத்தின் உள் கூரையைதிருத்துதல். |
| | 11 | பிராந்திய அலுவலக கட்டிடத்தின் மேற்கூரையை திருத்துதல். |
| | 12 | பிராந்திய அலுவலக கட்டிடத்தில் உள்ள தண்ணீர் தொட்டியை பழுது பார்த்தல். |
| இரத்தினபுரி | 13 | முகாமையாளருக்கான உத்தியோகபூர்வ இல்லத்தில் குளியலறையை புதுப்பித்தல். |
| மட்டக்களப்பு | 14 | மேற்கு திசையின் கூரையின் நீட்சி. |
| மாரவில | 15 | பத்துலுஓயா தெ.அ.உ.இல்லக் காணியின் வேலி திருத்தம். |
| | 16 | பத்துலுஓயா தெ.அ.உ. இல்லத்தின்அலுவலகம் திருத்தப்படுதல். |
| | 17 | ஆணமடுவ தெ.அ.உ. இல்லத்தின் கூரை திருத்தம். |
| யாழ்ப்பாணம் | 18 | உள்கூரைதிருத்தம். |
| ஹம்பாந்தோட்டை | 19 | பிராந்திய அலுவலகத்தின் பேமண்ட் மற்றும் தாழ்வாரப் பகுதி திருத்தப்படுதல். |
| குளியாப்பிட்டி | 20 | அலுவலக கட்டிடத்தின் உள்கூரைதிருத்தம். |
| கம்பஹா | 21 | சூரியபாலுவஇலக்கம் 02உத்தியோகபூர்வ இல்லத்தின்கூரை திருத்தம். |
| | 22 | அலுவலக கேட்போர் கூடத்தின் உள்கூரைதிருத்தம். |
| | 23 | இந்திகொல்ல, 08 ஆம் இலக்க உத்தியோகபூர்வ இல்லத்தின் கூரை திருத்தம். |
| தலைமை அலுவலகம் | 24 | முன்பகுதி உருக்கு கட்டமைப்புப் பகுதியின்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுதல். |

# 4.0 உள்ளககணக்காய்வு

## 4.1 உள்ளக கணக்காய்வின் நோக்கம்

அபாயங்களை துல்லியமாகக் கண்டறிந்து செயல்திறனை மேம்படுத்துவதன் பொருட்டு பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு முறைகளைச் செயல்படுத்த தென்னை பயிர்ச்செய்கை சபையின் முகாமைத்துவத்திற்கு இடமளித்தல்.

## 4.2 இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட உள்ளககணக்காய்வு விசாரணைகள்

உள்ளக கணக்காய்வின்விடயப் பரப்புக்கான பணிப்பொறுப்பு மற்றும் கடமைகள் 2023 ஆம் ஆண்டில் உயர் தரத்துடன் தொடர்ச்சியான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. விசேட கணக்காய்வு நடவடிக்கைகள் பற்றிய சுருக்க அறிக்கை - மஹாயாய மாதிரி தென்னந்தோப்பு
2. விசேட கணக்காய்வு நடவடிக்கைகள் பற்றிய சுருக்க அறிக்கை - பல்லேகெலே தென்னைநாற்றங்கால்
3. களுத்துறை பிராந்திய அலுவலகம் - சலுகை கொடுப்பனவு இடைக்கால ஆய்வு அறிக்கை
4. தலைமை அலுவலக வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பான கணக்காய்வு விசாரணை
5. வருடாந்த கணக்காய்வு நடவடிக்கைகள் பற்றிய சுருக்க அறிக்கை - ரந்தெனிய மாதிரி தென்னந்தோப்பு
6. தென்னை பயிர்ச்செய்கைச் சபைக்குச் சொந்தமான நாற்றங்கால்களை பொறுத்த வரையில் தனித்தனியாக இலாபம்/நட்டம் கணக்கிடுவதில் ஏற்படும் தாமதம் மற்றும் பிழைகள் குறித்து அறிக்கையிடுதல்.
7. தலைமையகத்தில்982 (கப்ருக்க கடன்) கணக்கு வங்கியின் இணக்கக்கூற்று சோதனை

8. தலைமையகத்தின் களஞ்சியம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு விசாரணை

9. அநுராதபுரம் உத்தியோகபூர்வ இல்லத்தின் நிர்மாணம் தொடர்பான கோப்பு காணமற்போதல் தொடர்பான அறிக்கை

10. போபிட்டிய மாதிரி தென்னந்தோப்பு – அவசர கணக்காய்வு விசாரணையின் சுருக்க அறிக்கை

11. மஹாயாய மாதிரி தென்னந்தோப்பில் உள்ள கப்துருபாயவின் பழைய இருப்புகளை அகற்றுவது தொடர்பான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை

12. கண்தெட்டிய தென்னை நாற்றங்கால் - அவசர கணக்காய்வு விசாரணை

13. தியதொரதென்னை நாற்றங்கால் - அவசர கணக்காய்வு விசாரணை

14. வருடாந்த கணக்காய்வு நடவடிக்கைகள் பற்றிய சுருக்க அறிக்கை - மாத்தளை பிராந்திய அலுவலகம்

15. கெர்ட்லண்ட் உடுகம பிரதேசத்தில் வெட்டுமர பெறுமதி கொண்ட 2 மரங்களை வெட்டுவது தொடர்பான விசேட கணக்காய்வு விசாரணை

16. தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலக ஆய்வு - மாத்தளை பிராந்திய அலுவலகம்

17. கப்ருக்க முதலீட்டு கடன் ஆவண சரிபார்ப்பு - மாத்தளை பிராந்திய அலுவலகம்

18. மாத்தளை பிராந்திய அலுவலகத்தில் இடம்பெறும் முறைகேடுகள் பற்றிய அறிக்கை

19. மஹாயாய மாதிரி தென்னந்தோப்பில் 24 தேக்கு மரங்கள் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பான விசேட கணக்காய்வு விசாரணை

20. பெறுமதியானவெட்டு மரங்களின் பௌதீக சரிபார்ப்பு - மஹாயாய மாதிரி தென்னந்தோப்பு

**21.** மஹாயாய மாதிரி தென்னந்தோப்பில் தென்னை பயிர்ச் செய்கைக்குஇடையூரான 24 தேக்கு மரங்களை விற்பனை செய்தல் தொடர்பான விசேட கணக்காய்வு விசாரணை

**22.** வருடாந்த கணக்காய்வு அறிக்கை - கொரை மாதிரி தென்னந்தோப்பு

**23.** தலைமை அலுவலக வங்கி கணக்குகள் தொடர்பான கணக்காய்வு விசாரணை

மேற்கூறிய பிரிவுகளில் நடத்தப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட பிழைகள் மற்றும் குறைபாடுகள் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டு அவற்றை சரிசெய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த கணக்காய்வு அவதானிப்புகள் மற்றும் பதில்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு, குழுவின் பரிந்துரைகள் தேவையான முடிவுகளை எடுப்பதற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம்

#### 4.3.1 இதன் நோக்கம்

கணக்காய்வு குழுக் கூட்டங்களை நடத்துவதன் முக்கிய நோக்கம், உள்ளக மற்றும் வெளிப்புற கணக்காய்வு மூலம் வெளிப்படுத்தப்படும் பிழைகள் மற்றும் குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுதல் மற்றும்சபையின் உள்ளககணக்காய்வினைவினைத்திறன் மற்றும் பலமாக்குதல் ஆகும்.

இந்த வருடத்தில் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

#### 4.3.2 நடைபெற்ற திகதி

- 2023/01கூட்டம் 2023.01.20
- 2023/02கூட்டம் 2023.05.10
- 2023/03 கூட்டம் 2023.10.11

- 2023/04 கூட்டம் 2023.12.19

### 4.3.3 குழுக்களின் அமைப்பு

| | | |
|---|---|---|
| 1. | திரு. ரீ.எம்.ஜே.பண்டார<br>மேலதிகபணிப்பாளர் நாயகம் (ப.க.)<br>அரச தொழில்முயற்சி திணைக்களம் | தலைவர் |
| 2. | திரு.கே.எஸ். விஜயகீர்த்தி<br>மேலதிக செயலாளர்<br>கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு | உறுப்பினர் |
| 3. | திரு.சமந்த குமார மளவியாராச்சி<br>பணிப்பாளர் சபை உறுப்பினர் | உறுப்பினர் |
| 4. | திரு. கே. ஏ.சி. ஷாமந்த<br>பிரதம உள்ளககணக்காய்வாளர்<br>கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு | அவதானிப்பாளர் |
| 5. | திருமதி கே.டி.ஏ.சி. அமரசேன<br>கணக்காய்வு அத்தியட்சகர்<br>தேசிய கணக்காய்வு அலுவலகம் | அவதானிப்பாளர் |
| 6. | திரு.டப்ளியூ.எம்.ஏ.பீ.விஜேசிங்க<br>பொதுமுகாமையாளர்<br>தென்னை பயிர்ச்செய்கை சபை | செயலாளர்/அழைப்பாளர் |
| 7. | திரு.பி.ஏ.வஜிர பமுனுஆராச்சி<br>(தென்னை பயிர்ச்செய்கை சபை) | உள்ளககணக்காய்வாளர் |

உள்ளக கணக்காய்வு விசாரணைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் பிழைகள் குறைபாடுகள்மற்றும் அரசாங்க கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்வு வினவல்கள் ஆகியவைகணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் கலந்துரையாடப்பட்டு தேவையான திருத்தங்களுக்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படும்.

# 05. நிதி முகாமைத்துவப் பிரிவு

## 5.1 கணக்குக் கூற்று

தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் ஒட்டுமொத்தப் பணிகள் 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, உரிய சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப் பிரமானங்களுக்கு உட்பட்டு,இலங்கை பொது நிதிக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம்2023.12.31ஆம் திகதியுடன் முடிவடையும் வருடாந்த நிதி அறிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் 20 பிராந்திய அலுவலகங்கள் மற்றும் 3 பயிற்சி நிலையங்களைக் கொண்ட ஒருங்கிணைக்கப்பட்ட வலையமைப்பில் 37 நாற்றுமேடைகள் மற்றும் 12 மாதிரி தென்னந்தோப்புகளால் அடையப்பட வேண்டிய இலக்குகளை அடைவதற்கும் தேசிய மட்ட அபிவிருத்திக்கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குமாகபொருத்தமாக அமையும் நிதி மதிப்பீடுகளைத் தயாரித்தல், திட்டமிடல், நெறிப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், ஆவணப்படுத்தல், அறிக்கையிடல் மற்றும் எதிர்வுகூறல் ஆகியவை நிதி முகாமைத்துவப் பிரிவின் முதன்மை செயல்முறைகளாகும்.

பிரதிப் பொது முகாமையாளரின் (நிதி முகாமைத்துவம்) நெறிப்படுத்தல் மற்றும் வழிகாட்டுதலின் கீழ் நிதி முகாமைத்துவ பிரிவின்உதவிப் பொது முகாமையாளர் (நிதி முகாமைத்துவம்), கணக்காளர் (நிதி), கணக்காளர் (மாதிரி தென்னந்தோப்பு), கணக்கு உத்தியோகத்தர்களாகவும்உதவிப் பணியாளர்கள்தீவு முழுவதிலும் உள்ள பிரதேச அலுவலகங்களில் நிதி நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல், அறிக்கையிடல் மற்றும் கட்டுப்படுத்துதல் என்பவற்றை மேற்கொள்கின்றனர்.

2023 ஆம் ஆண்டுக்கானசபையின் மதிப்பீடுகளுக்குரியதாகமீண்டெழும் செலவினத் தலைப்பின் கீழ் 509.793மி.ரூபாவும்மூலதனச் செலவுத் தலைப்பின் கீழ் 500மி.ரூபாவும் திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளது.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு சார்பாக தென்னை பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதன் பொருட்டு பின்வரும் விசேட கருத்திட்டங்களை 2023

ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கும் தென்னை பயிர்ச்செய்கை சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் பரவிய வெலிகம தென்னை ஓலை வாடுதல் மற்றும் அழுகுதல் நோயைக் கட்டுப்படுத்தும் கருத்திட்டத்திற்கு 26.119 மில்லியன் ரூபாயும், வெள்ளை ஈ பூச்சி அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த 85.5 மில்லியன் ரூபாயும், ப்ரோண்டிஸ்பா பூச்சி அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த 9.7மில்லியன் ரூபாயும் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2023 ஆம் ஆண்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வடக்கு தென்னை முக்கோண வலயக் கருத்திட்டத்திற்கானதென்னம்பிள்ளைகளை ஏற்றிச் செல்வதற்காக 9.5 மி.ரூபா கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சும் 3.406 மி.ரூபா தென்னை அபிவிருத்தி அதிகார சபையும் எமக்கு வழங்கியுள்ளன.

2023.12.31 நிலவரப்படி, சுயநிதிப் பிரிவின் கீழ், நாற்றங்கால் மேம்பாட்டுப் பிரிவால் ரூ.144.72 மில்லியன் பற்றாக்குறையும், தென்னை மாதிரித் தோட்டங்கள் மூலம் ரூ.20.39 மில்லியன் உபரியும் உருவாக்கப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டில், தென்னை சாகுபடி வாரியத்தின் முழு செயல்பாடுகளிலிருந்தும் ரூ.18.80 மில்லியன் இதர வருமானத்தை ஈட்ட வாய்ப்பு உள்ளது. 2023.12.31 நிலவரப்படி மொத்த உபரி ரூ.62.743 மில்லியன் ஆகும்.

2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மீண்டெழும் செலவினம் 634.945 மி.ரூபா என்பதோடுதென்னைத் துறையின் விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்தி சேவைக்காக, தென்னை விவசாயிகளுக்கு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் மானியமாக 586.485 மி.ரூபா செலவிடப்பட்டுள்ளது. அதன்படி, சபைக்குச் சொந்தமான மொத்த சொத்து மதிப்பு 5.281பி.ரூபாவாகும்.

தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை
9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல.

## Coconut Cultivation Board
### Statement of Financial Position for the Year Ended as at 31st December 2023

| | Note | Budget 2023 Rs. | 2023 Rs. | 2023 Rs. | 2022 Rs. | 2022 Rs. |
|---|---|---|---|---|---|---|
| **ASSETS** | | | | | | |
| **Non- Current Assets** | | | | | | |
| Property, Plant and Equipment | 02 | 236,249,509 | 2,631,365,539 | | 2,685,637,453 | |
| Work In Progress | 03 | | 37,184,910 | | 52,785,916 | |
| Kapruka Refinance Investment (L | 04 | | 560,716,597 | | 431,238,846 | |
| Biological Assets | 05-01 | | 617,432,939 | | 581,992,301 | |
| Biological Stock | 06 | | 102,277,100 | 3,948,977,086 | 44,188,215 | 3,795,842,731 |
| Leased Land | 07 | | 4,732,920 | 4,732,920 | 4,879,769 | 4,879,769 |
| **Current Assets** | | | | | | |
| Inventories / Stocks | 08 | | 514,593,147 | | 902,523,566 | |
| Trade and other Receivables | 09 | | 172,391,881 | | 534,370,911 | |
| Prepayments | 10 | | 858,620 | | 536,164 | |
| Deposits (ST) | 11 | | 4,418,507 | | 4,168,507 | |
| Investment (ST) | 12 | | 904,068,523 | | 713,680,908 | |
| Cash and Cash Equivalents | 13 | | 217,409,510 | | 254,762,252 | |
| | | | | 1,813,740,188 | | 2,410,042,308 |
| **Total Assets** | | | | 5,767,450,193 | | 6,210,764,808 |
| **LESS: LIABILITIES** | | | | | | |
| **Current Liabilities** | | | | | | |
| Payable | 14 | | 202,090,026 | | 169,140,827 | |
| Accrued Expenses | 15 | | 26,007,058 | | 19,406,048 | |
| Short -term Provision | 16 | | 21,193,131 | | 35,516,580 | |
| | | | 249,290,215 | | 224,063,455 | |
| **Non-current liabilities** | | | | | | |
| Long Term Provision | 16 | | 237,140,792 | | 239,903,342 | |
| | | | 237,140,792 | | 239,903,342 | |
| **Total liabilities** | | | | 486,431,007 | | 463,966,797 |
| **Total Net Assets** | | | | 5,281,019,186 | | 5,746,798,011 |
| **NET ASSETS/EQUITY** | | | | | | |
| **Accumulated Fund** | | | | | | |
| General Fund | 18 | | 1,613,421,665 | | 1,983,402,596 | |
| Capital Fund | 17 | | 393,493,356 | | 359,228,377 | |
| Capital Fund(Kapruka) | 19 | | 1,099,584,403 | | 972,228,691 | |
| Cr. Grant. Fund (Kapruka) | 20 | | 193,106,945 | 3,299,606,368 | 185,333,917 | 3,500,193,581 |
| **Reserves** | | | | | | |
| Revaluation Reserve | 21 | | 13,866,117 | | 66,937,441 | |
| Asset Revaluation Reserve | 21 | | 1,798,827,780 | | 2,006,425,351 | |
| Revenue Reserves (C.M.G) | 22 | | 168,718,923 | 1,981,412,819 | 173,241,637 | 2,246,604,429 |
| **Total Net Assets /Equity** | | | | 5,281,019,186 | | 5,746,798,010 |

The Accounting Policies and Notes on Page Nos. 1 to 56 are integral part of these Financial Statements. The board of Directors is responsible for the preparation and presantation of these Financial Statements.

G.D.T.S. Perera
Deputy General Manager
Finance Management
Coconut Cultivation Board

**G. D. T. S. Perera**
Deputy General Manager (Acting)
(Finance Management)
Coconut Cultivation Board
9/428, Denzil Kobbekaduwa Road
Battaramulla.

W.M.A.B. Wijesinghe
General Manageer
Coconut Cultivation Board

**W. M. A. B. Wijesinghe**
General Manager
Coconut Cultivation Board
9/428, Denzil Kobbekaduwa Mawatha
Battaramulla

A.V.K. Madhavi Herath
Chairman
Coconut Cultivation Board

**A. V. K. Madhavie Herath**
Chairman
Coconut Cultivation Board
9/428, Denzil Kobbekaduwa Mawatha
Battaramulla.

K.S. Wijayakeerthi
Additional Secretary - Ministry of Plantation
Board of Director
Coconut Cultivation Board

**K. S. Wijayakeerthi**
Additional Secretary
(Minor Crops Development)
Ministry of Plantation Industries
3rd Floor, Sethsiripaya Stage II,
Battaramulla

**Coconut Cultivation Board**
**Statement of Financial Performance for the Year Ended**
**31 st DECEMBER 2023**

| | Note | Approved Budget 2023 Rs. | 2023 Rs. | 2023 Rs. | 2022 Rs. | 2022 Rs. |
|---|---|---|---|---|---|---|
| Operating Revenue | | | | | | |
| Government Recurrent Grant | | 510,000,000 | 509,793,000 | | 394,520,000 | |
| Government Capital Grant | | 500,000,000 | 465,735,021 | | 228,000,000 | |
| Ministry of Plantation Industries - Weligama Wilt | | | 26,119,900 | | 45,126,000 | |
| Ministry of Plantation Industries - Brontispa Insects | | | 9,700,000 | | - | |
| Ministry Special Project | | | - | | 48,888,000 | |
| Ministry of Plantation - White Fly | | | 85,500,000 | | - | |
| Ministry of Plantation - Intercrop Subsidy | | | - | | 30,000,000 | |
| Ministry of Plantation Industries - Irrigation Project | | | - | | 31,500,000 | |
| Ministry of Plantation Industries - North Coconut Tran: | | | 3,406,386 | | - | |
| Ministry of Plantation Industries - North Prov: Seeding PR | | | 9,500,000 | | - | |
| Min. of Plts - Impr. of coconut land Prod. Prject | | | - | | 62,910,000 | |
| Total of Revenue (A) | | | | **1,109,754,307** | | **840,944,000** |
| Other Income | | | - | | | |
| Sundry Income | **24** | 7,990,000 | 18,804,016 | | 53,412,252 | |
| Coconut Model Garden Income (i) | **26** | 711,555,708 | 377,370,876 | | 553,143,470 | |
| Kapruka Project(i) | **29** | - | 180,909,255 | | 111,574,029 | |
| Profit on disposal account | **25** | - | - | | 61,652 | |
| Circuit Bungalow Income (cmg) | **26** | 11,522,000 | 3,030,205 | | 1,555,470 | |
| Circuit Bungalow Income | **30** | | 4,365,600 | | 4,295,849 | |
| Mita Project Income | **31** | 24,000,000 | 16,674,386 | | 10,962,875 | |
| Nursery Income | **23** | 1,890,584,720 | 815,232,594 | | 994,486,983 | |
| Training Center Income | **28-2** | 3,810,000 | 298,176 | 1,416,685,109 | 62,264 | 1,729,554,843 |
| | | | | **2,526,439,416** | | **2,570,498,843** |
| Development Programme Expenses | **27** | 500,000,000 | | **472,040,263** | | **453,373,552** |
| Special Projects | **27-1** | | | **114,444,834** | | - |
| Operating Expenditure | | | | | | |
| Personal Emoluments | **28** | 510,000,000 | 456,066,871 | | 396,829,213 | |
| Travelling & Subsistense | **28** | 7,134,148 | 5,478,300 | | 5,365,044 | |
| Supplies And Consumable Used | **28** | 44,815,439 | 28,680,680 | | 33,657,730 | |
| Maintatinance | **28** | 65,467,715 | 17,183,133 | | 43,659,110 | |
| Contractual Servicess | **28** | 37,710,900 | 32,428,326 | | 25,357,012 | |
| Depreciation And Amortization Expenses | **28** | - | 82,647,065 | | 55,517,342 | |
| Other Recurrent Expenditure | **28** | 62,409,350 | 10,726,973 | | 53,800,340 | |
| Coconut Model Garden Expense | **26** | 543,823,757 | 356,068,717 | | 333,416,808 | |
| Nursery Expense | **23** | 1,646,380,603 | 959,949,795 | | 729,007,963 | |
| Circuit Bungalow Expense | **30** | 7,882,160 | 3,767,955 | | 1,784,829 | |
| Circuit Bungalow Expense (cmg) | **26** | | 3,938,194 | | 1,764,857 | |
| Mita Project Expense | **31** | 22,661,805 | 15,973,911 | | 13,324,134 | |
| Kapruka Ayojana Fund Expenditure | **29** | - | 28,054,451 | | 18,622,731 | |
| Training Center Expenses | **28-2** | 17,949,003 | 1,733,376 | | 15,395,760 | |
| Total Expenses | | | | **2,002,697,748** | | **1,727,502,874** |
| Surplus/Deficiate for the year | | | - | **(62,743,429)** | | **389,622,417** |

**Coconut Cultivation Board**

**CONSOLIDATED CASH FLOW STATEMENT FOR THE YEAR ENDED 31 st DECEMBER 2023**

| Note | | 2023 Rs | | 2022 Rs |
|---|---|---|---|---|
| Cash Flows from Operating Activities | | | | |
| Surplus /(deficit) from ordinary activities | | (62,743,429) | | 389,622,417 |
| Adjustment for Item not Involving Movement of Cash | | | | |
| Depreciation of the Year | 112,845,225 | | 55,543,182 | |
| Provision for Gratuity | 29,360,246 | | 18,739,587 | |
| Revaluation of Assets | (260,668,896) | | | |
| Provision for Audit Fees | 450,000 | | - | |
| Revenue reserve | (4,522,715) | | | |
| Interest Income | (10,391,409) | | (7,691,157) | |
| Mature Plantation Depreciation of the year | 37,045,340 | | 11,069,788 | |
| Write-off Lease Land | 146,849 | | 146,849 | |
| Write-off Capital Depreciation of the Year | 34,264,978 | | (39,399,282) | |
| Provision for cash handling allowane | 1,710,000 | | 1,600,000 | |
| Provition for Bulding Contract | (14,485,699) | | | |
| Provision for L.R.C. Tax | 275,000 | (73,971,081) | 275,000 | 40,283,967 |
| | | (136,714,509) | | 429,906,384 |
| Adjustment - Kapruka Fund | | | | |
| Operational Account Kapruka Surplus (Deficit) Note 30 | | | - | |
| Interest Income | (178,613,097) | | (111,136,279) | |
| Credit Guaranty Fund ( Kapruka ) | 2,948,658 | (175,664,439) | 1,282,018 | (109,854,261) |
| Operating Profit of Working Capital | | (312,378,948) | | 320,052,124 |
| Change in Items of Working Capital | | | | |
| Biological Assets | - | | | |
| Livestocks(increase)/decrease | (58,088,885) | | (10,020,025) | |
| Stocks (Increase) / Decrease | 387,930,419 | | (121,281,977) | |
| Debtors (Increase) / Decrease | 361,979,030 | | (457,523,626) | |
| Deposit (Increase) / Decrease | (250,000) | | (652,250) | |
| Current Account (Increase) / Decrease | | | - | |
| Current Account (Increase) / Decrease | - | | | |
| Current Account (Increase) / Decrease | - | | | |
| Fixed Deposits (Increase) / Decrease - ST | (190,387,615) | | (592,406,942) | |
| Prior year adjustment kapruka | 106,936 | | 38,843 | |
| Prior year adjustment | (189,164,358) | | 10,439,422 | |
| Prepayment ( Increase ) Decrease | (322,456) | | (423,584) | |
| Creditors Increase/ ( Decrease ) | 32,949,199 | | (144,129,273) | |
| Loan -term Provision | - | | | |
| Short -term Provision | - | | | |
| Accrued Expenses Increase / (Decrease) | 6,601,010 | 351,353,280 | (578,355) | (1,316,537,767) |
| Net Cash Generated from Operating Activities | | 38,974,332 | | (996,485,643) |
| Cash Flows from Investing Activities | | | | |
| Purchase of Fixed Assets ( Increase) | (124,891,694) | | (76,080,444) | |
| Asset Adjustment | 29,273,043 | | 256,085 | |
| Mature Planation | 54,482,818 | | 49,634,452 | |
| Investment Long Term - Decrease ( Increase) | (129,477,751) | | 65,645,031 | |
| Investment Adjustment | | | 622,546,965 | |
| Interest Income Received | 189,004,506 | | 118,827,436 | |
| Deferred Expenditure | (89,923,456) | | (71,193,408) | |
| Working Progress | 15,601,006 | (55,931,527) | (1,474,332) | 708,161,786 |
| Net cash Used in investing activities | | (16,957,195) | | (288,323,858) |
| Cash Flows from Financing Activities | | | | |
| Capital Reserve | 0 | | | |
| Capital Grant /Treasury ( Kapruka) | 14,000,000 | | 40,034,421 | |
| Capital Grant /Treasury | | | - | |
| Special Project Ministry grant | | | - | |
| | 14,000,000 | | 40,034,421 | |
| Used in cash activities | | | | |
| Cash handling allowance paid | (1,600,000) | | (1,651,933) | |
| Paid Audit fee | (672,750) | | (570,000) | |
| Gratuity Paid | (32,122,796) | | (13,659,288) | |
| | (34,395,546) | (20,395,546) | (15,881,221) | 24,153,200 |
| | | (37,352,742) | | (264,170,658) |
| Net Cash Generate from financing activities | | | | |
| Net increase/(decrease ) in cash and Cash Equivalents | (37,352,742) | | (264,170,658) | |
| Cash and cash equivalents at beginning of the Year | 254,762,252 | | 518,932,909 | |
| Cash and cash equivalents at end of the Year | 217,409,510 | | 254,762,252 | |

# Coconut Cultivation Board

## STATEMENT OF CHANGES IN NET ASSETS FOR THE YEAR ENDED As at 31 st DECEMBER 2023

Rs.

| | Notes | Accumulated Fund | Accumulated reserve | Translation reserve | Total |
|---|---|---|---|---|---|
| **Balance at 31st December 2020** | | 2,314,178,380 | 241,434,098 | - | 2,555,612,478 |
| Changes in accounting policy | | - | - | | - |
| Adjustment balance | | - | - | | |
| | | **2,314,178,380** | **241,434,098** | - | **2,555,612,478** |
| Surplus on revaluation of properties | | - | - | - | - |
| Deficit on revaluation of investments | | - | - | - | - |
| Currency translation differences | | - | - | - | - |
| | | **2,314,178,380** | **241,434,098** | - | **2,555,612,478** |
| **Net gains and losses not recognized in the statement of financial performance** | | | | | |
| Increase of capital fund | 18 | 20,012,607 | - | - | 20,012,607 |
| Prior year adjustment account | 19 | (788,484) | - | - | (788,484) |
| Surplus/(Deficit) for the period | 19 | 611,133,769 | - | - | 611,133,769 |
| Increase fo capital fund (Kapruka) | 20 | 101,661,834 | - | - | 101,661,834 |
| Increase of credit Guarantee fund (Kapruka) | 21 | 50,233,065 | - | - | 50,233,065 |
| **Balance as at 31st December 2021** | | **3,096,431,171** | **241,434,098** | - | **3,337,865,270** |
| Deficit on revaluation of properties | | - | | - | - |
| Surplus on revaluation of investments | | - | 2,005,170,332 | - | 2,005,170,332 |
| Currency translation differences | | - | - | - | - |
| | | **3,096,431,171** | **2,246,604,430** | - | **5,343,035,601** |
| **Net gains and losses not recognized in the statement of financial performance** | | | | | |
| General fund | | 1,000 | | | 1,000 |
| Increase of capital fund | 18 | (39,399,282) | - | - | (39,399,282) |
| Prior year adjustment account | 19 | 12,221,836 | - | - | 12,221,836 |
| Surplus/(Deficit) for the period | 19 | 389,622,417 | - | - | 389,622,417 |
| Increase fo capital fund (Kapruka) | 20 | 17,939,588 | - | - | 17,939,588 |
| Increase of credit Guarantee fund (Kapruka) | 21 | 23,376,851 | - | - | 23,376,851 |
| **Balance as at 31st December 2022** | | **3,500,193,581** | **2,246,604,430** | - | **5,746,798,011** |
| Deficit on revaluation of properties | | | (265,191,611) | | (265,191,611) |
| Surplus on revaluation of investments | | | | | |
| Currency translation differences | | | | | |
| | | **3,500,193,581** | **1,981,412,819** | - | **5,481,606,400** |
| **Net gains and losses not recognized in the statement of financial performance** | | | | - | |
| General Fund | | 149,767,537 | | - | 149,767,537 |
| Capital Fund | | 34,264,979 | | - | 34,264,979 |
| Prior year adjustment account | | (338,824,959) | | - | (338,824,959) |
| Surplus/(Deficit) for the period | | (62,743,429) | | - | (62,743,429) |
| Increase fo capital fund (Kapruka) | | 9,175,630 | | - | 9,175,630 |
| Increase of credit Guarantee fund (Kapruka) | | 7,773,028 | | - | 7,773,028 |
| Balance as at 31st December 2023 | | **3,299,606,368** | **1,981,412,819** | - | **5,281,019,186** |

எனது இல: பீஏஎல்/எப்/சீசீபீஎப்/01/2023/07 திகதி : 2024 அக்டோபர் 28

தலைவர்,
தென்னைப் பயிர்ச் செய்கை சபை.

**தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் 2023 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள், ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை**

..........................................................................................................................................

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

டப்ளியூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

பிரதிகள் :

1. செயலாளர் – நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை உருவாக்கம், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
2. செயலாளர் – சுற்றாடல், வனசீவராசிகள், வன வளங்கள், நீர் வழங்கல், பெருந்தோட்ட மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

எனது இல: பீஏஎல்/எப்/சீசீபீஎப்/01/2023/07 திகதி : 2024 அக்டோபர் 28

தலைவர்,
தென்னைப் பயிர்ச் செய்கை சபை.

**தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் 2023 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள், ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை**

.......................................................................................................................................

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் 2023 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகைக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகளைக் கொண்டமைந்த 2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கம்பெனியின் 2023 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது

நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் தேவையானபோது அல்லது அனுமதியளிக்கப்பட்டுள்ளபோது தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒவ்வொன்றுக்காக எதிரீடு செய்யப்படலாகாது என்ற போதிலும் 21,193,131 ரூபா குறுகியகால ஒதுக்க நிலுவையில் 14,485,699 ரூபா பற்று நிலுவையும் உள்ளடங்கியிருந்ததால் குறுகியகால ஒதுக்க நிலுவை 14,485,699 ரூபா குறைவாக காட்டடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வு ஆண்டில் நான்கு நிறுவனங்களிடமிருந்து போக்குவரத்துக் கட்டணம் மற்றும் தரை இறக்கும் கூலி அடங்கலாக 51,024,030 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பசளை 2023 டிசெம்பர் 31 ஆம் திகதியில் மஹயாய மாதிரி தென்னந்தோப்பில் கலஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததோடு நிதிக் கூற்றுக்களில் பசளையின் கிரயமாக 50,073,908 ரூபா பசளை இருப்புக் கணக்கிலும், போக்குவரத்துச் செலவு 777,942 ரூபா நானாவித செலவாகவும் தரை இறக்கும் கட்டணம் 172,180 ரூபா மாதிரி தென்னந்தோப்புச் செலவாகவும் கணக்குப் பதியப்பட்டிருந்தது. இதன் காரணமாக இறுதி பசளை இருப்பின் பெறுமதி 950,122 ரூபா குறைவாகவும், நானாவித செலவுகள் 777,942 ரூபா அதிகமாகவும் நாற்றுமேடை செலவினம் 172,180 ரூபா அதிகமாகவும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(இ) 2022 டிசெம்பர் 31 ஆம் திகதியில் 4 நிதி நிறுவனங்களுக்கு உரியதாக 209,526,817 ரூபாவான மீள்நிதி கடன் நிலுவை மீது மேற்படி நிதி நிறுவனங்களால் பிணை காப்பு நிதியத்தில் வைப்புச் செய்யப்பட வேண்டிய நூற்றுக்கு 0.5 ஆன தொகையாகிய 1,047,634 ரூபா சார்பாக 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில்கூட 916,588 ரூபா வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, கிடைக்க வேண்டிய பிணை காப்பு மற்றும் பிணை காப்பு நிதியம் 916,588 ரூபாவினால் குறைவாக கணக்குப் பதியப்பட்டிருந்தது.

(ஈ) பிணை காப்பு ஒப்பந்தத்தின் 7.0 பிரகாரம் தீர்க்கப்படாத கடன் வகுதியில் மாற்றப்பட்டிருந்த 2,403,672 ரூபா கடன் நிலுவை சார்பாக 2023 டிசெம்பர் 31 ஆம் திகதியில் 1,201,701 ரூபா பிணை காப்பு செலுத்தல் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு அது தொடர்பில் சட்ட நடவடிக்கை இடம்பெற்று வந்த போதிலும் அது இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் நிகழ்தகு சொத்தாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) தலைமையகத்திற்கு ஒரு பகுதியை நிர்மாணிப்பது தொடர்பில் பழைய ஒப்பந்த உடன்படிக்கை மீறப்பட்டதன் காரணமாக ஒப்பந்ததாரருடன் காணப்படுகின்ற சட்ட ரீதியான சிக்கல்களைத் தீர்ப்பது சம்பந்தமாக உறப்பட்ட 255,500 ரூபா செலவினம், ஒரு செவினமாக இனங்காணப்படாமல் முடிவடையாத வேலையாக இனங்காணப்பட்டிருந்தது.

(ஊ) தலைமையகத்திற்கு ஒரு பகுதியை சேர்ப்பது தொடர்பான ஒப்பந்தத்திற்காக செலுத்தப்பட்ட 1,551,345 ரூபா முற்பணத் தொகையானது முற்பணமாக இனங்காணப்படாமல் முடிவடையாத வேலையாக கணக்குப் பதியப்பட்டிருந்தது.

(எ) பத்துலுஓயா தெங்கு அப்விருத்தி அலுவலர் உத்தியோகபூர்வ இல்ல வளாகத்தின் வேலியைத் திருத்துவது உட்பட உத்தியோகபூர்வ இல்லத்தின் திருத்தப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும் அதன் பொருட்டு மாரவில பிராந்திய அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட 1,531,659 ரூபா முற்பணத் தொகையானது முற்பணக் கணக்கில் வரவு வைத்து திருத்தச் செலவாக கணக்குப் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2023 டிசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைக் கூற்றில் மீள்நிதி கடன் நிலுவையாக நடைமுறை சொத்துக்களில் காட்டப்பட்டிருந்த 560,716,597 ரூபா தொகையானது நிதி நிறுவனங்களின் நிலுவை உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் நிலுவை என்பதோடு 2023 டிசெம்பர் மாதத்திற்குரியதாக நிதி நிறுவனங்களுக்கு சபையினால் மீள்நிதியளித்துள்ள 12,338,000 ரூபா தொகை அக்கடன் நிலுவையில் உள்ளடங்கி இருக்காமை காரணமாக மீள்நிதி கடன் நிலுவை அத்தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஐ) 2023 டிசெம்பர் 31 ஆம் திகதியில் மக்கள் வங்கிக்கு உரியதாக வங்கியினால் அனுப்பப்பட்ட நிலுவை உறுதிப்படுத்தல் கடிதத்தின் படி மீள்நிதி கடன்

நிலுவையானது 82,086,935 ரூபா என்பதோடு சபையின் பேரேட்டின் பிரகாரம் இந்த நிலுவையானது 81,089,716 ரூபா என்ற போதிலும் இந்த வேறுபாடு தொடர்பில் ஆராய்ந்து தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2003 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளில் காட்டப்பட்டுள்ள தென்னைப் பயிர்ச் செய்கை சபைக்குச் சொந்தமான குளியாப்பிட்டி, கேகாலை, களுத்துறை, மாத்தறை, மாத்தளை பிராந்திய அலுவலகங்கள் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள 2 ஏக்கர் 1 ரூட் 34.4 பர்ச்சஸ் காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2022 ஆம் ஆண்டுக்கான 2,971,759 ரூபா தடுத்து வைத்தல் வரித் தொகை மீளாய்வு ஆண்டில் செலவுகளாக கணக்குப் பதியப்பட்டுள்ளதால் பற்றாக்குறை அத்தொகையினால் அதிகமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஔ) 2022 ஆம் ஆண்டில் கிடைக்க வேண்டிய தென்னங்கன்று போக்குவரத்துக் கொடுப்பனவுத் தொகையாகிய 48,888,000 ரூபா மீளாய்வு ஆண்டில் வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(க) எத்தகைய நிர்மாணிப்பும் மேற்கொள்ளப்படாமல் தலைமை அலுவலகத்தின் முன்பகுதிக்கு ஓர் உருக்குக் கட்டமைப்பு சேர்க்கப்படுவதற்கான 10,679,161 ரூபா மதிப்பீட்டுத் தொகை ஒப்பந்தத்திற்கான ஒதுக்கீட்டுக் கணக்குக்கு பற்று வைக்கப்பட்டு ஒப்பந்த கடன்கொடுத்தோர் கணக்குக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ங) 2023 ஆம் ஆண்டில் நீர்கொழும்பு விதை உற்பத்திப் பிரிவின் நவீனமயமாக்க நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 3,806,538 ரூபா மதிப்பீட்டுத் தொகை ஒப்பந்தங்களுக்கான ஒதுக்கீடுகள் கணக்குக்கு பற்று வைக்கப்பட்டு ஒப்பந்த கடன்கொடுத்தோர் கணக்குக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ச) 2023 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான 7,830,263 ரூபா தலைவரின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் மீளாய்வு ஆண்டில் செலவினமாக கணக்குப் பதியப்பட்டிருந்தது.

(ஞ) 2023 ஆண்டுக்கு உரியதாக திறைசேரியிலிருந்து கிடைத்த 34,264,979 ரூபா மூலதனக் கொடையானது மீளாய்வு ஆண்டில் வருமானமாக கணக்குப் பதியப்படாமல் பங்களிப்பு மூலதன கொடை நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ட) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிலிருந்து 2022 ஆம் ஆண்டுக்குரியதாக கிடைக்க வேண்டிய 207,660,000 ரூபா தொகை கிடைக்க வேண்டிய தொகை கணக்கு ஒன்றுக்கு பற்று வைக்கப்பட்டிருந்ததோடு அவ்வாறு கிடைக்க வேண்டிய தொகையில் 153,430,000 ரூபா வருமதி மீளாய்வு ஆண்டிலும் வருமானமாக கணக்குப் பதியப்பட்டிருந்தது. அவ்வாறு கிடைத்த தொகைக்குப் பதிலாக 201,195,000 ரூபா தொகையொன்றை நாற்றுமேடை செலவுக் கணக்கினை பற்று வைத்து கிடைக்க வேண்டிய அமைச்சு நிதியக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அமைச்சு நிதியக் கணக்கு 47,765,000 ரூபா குறைவாகவும் அத்தொகையினால் நட்டம் அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ண) கப்ருக்க முதலீட்டுக் கடன் திட்டத்திற்கு உரியதாக மீளாய்வு ஆண்டில் மொத்த வட்டி சலுகை செலுத்தலாக 16,870,720 ரூபா செலுத்தப்பட்டிருப்பினும் மீளாய்வு ஆண்டுக்கான வட்டி சலுகை செலவினம் 427,607 ரூபாவாக அமைந்தமையினால் வட்டி சலுகை செலவினம் 16,443,113 ரூபா அதிகமாக கணக்குப் பதியப்பட்டிருந்தது.

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக எனது காணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பானது இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலதிகமாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் பொருத்தமானதுமென்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிறுவனத்தின் 2023 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட சபையின் 2023 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதுபற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்களாக கருதப்படும். குறித்த ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் அரவணைக்கப்படமாட்டாது என்பதுடன் அது தொடர்பிலான எத்தகைய உறுதிப்படுத்தலையும் அல்லது அபிப்பிராயத்தையும் நான் தெரிவிக்கவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வுக்குரியதாக எனது பொறுப்பாக இருப்பது மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசிப்பதும் அவ்வாறு மேற்கொள்ளப்படும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறுவகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையான வகையில் இணங்கவில்லையா என்பதனை ஆராய்ந்து பார்ப்பதுமாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய தகவல்களின் மீதும் என்னால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் மீதும் அடிப்படையாக அமைந்து, குறித்த ஏனைய தகவல்கள் பொருண்மையான வகையில் தவறாக காட்டப்பட்டிருப்பதாக நான் தீர்மானிக்கும் பட்சத்தில், அவ்விடயத்தை நான் அறிக்கையிட வேண்டியது அவசியமாகும். இது தொடர்பில் அறிக்கையிடுவதற்கு எதுவும் கிடையாது.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்வாளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்குவதற்கான அதன் இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு முகாமைத்துவமானது சபையைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் சபையின் தொடர்ச்சியான இருப்புக்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பானது அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீரமானங்கள் மேற்கொள்ளப்படும்போது அது தொடர்பில் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்பதற்காகவும் மதிப்பீடு செய்வதற்காகவும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கும் நோக்கம் இல்லாத போதிலும் சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான புரிதல் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடும் மதிப்பிடப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் பொருண்மையான ஐயப்பாடு உள்ளதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வின் பொருட்டு நிறுவனத்திற்கான தொடர்ந்தியங்குதல் பற்றிய அடிப்படையினைப் பயன்படுத்துவதற்கான பொருத்தப்பாடுகள் தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக் கூற்றுக்களில் அது பற்றிய வெளிப்படுத்தல்கள் தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாத பட்சத்தில் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை முடிவுறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு அதன்பொருட்டு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளதென்பது மதிபீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகை தரப்புகள் விழிப்பூட்டப்பட்டன.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் மூலம் ஏற்படும் தாக்கத்தினை தவிர, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு எனது விசாரணையின் மூலம் காணப்படுகின்ற வகையில் உரிய நிதிசார் அறிக்கைகள் நிறுவனத்தினால் பேணிச் செல்லப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திசைவாகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியின் 1.2(அ) பந்தியில் தரப்பட்டுள்ள அவதானிப்பினைத் தவிர கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளன.

2.2 பின்பற்றப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களுக்கு வரையறுக்கப்பட்டதனுள் பின்வரும் கூற்றுக்களை முன்வைக்கும் அளவிற்கு எந்தவொரு விடயமும் எனது கவனத்திற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் சபையின் கட்டுப்பாட்டுச் சபையின் ஓர் அங்கத்தவருக்கு சபை தொடர்புபட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாக சாதாரண வர்த்தக நிலைமைக்குப் புறம்பாக தொடர்பு உள்ளதென்பது.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளைத் தவிர சம்பந்தப்பட்ட ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு அல்லது சபையி நிர்வாக சபையினால் விநியோகிக்கப்பட்டுள்ள வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாத வகையில் செய்யப்பட்டுள்ளது என்பது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் கட்டளைகளுக்கான தொடர்பு | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) 2020 சனவரி 27 ஆம் திகதிய அரச தொழில்முயற்சி சுற்றறிக்கை 1/2020 இன் 2ஆம் பிரிவு, அரச தொழில்முயற்சி சுற்றறிக்கை இலக்கம் 1/2015 இன் 2.3 பந்தி மற்றும் அரச தொழில்முயற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2023 மார்ச் 20 ஆம் திகதிய PED/P/02/02/15(i)term 3 ஆம் இலக்க கடிதம். | தென்னைப் பயிர்ச் செய்கை சபைக்காக அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியில் உள்ளடங்காத செயற்பாட்டுப் பணிப்பாளர் ஒருவருக்காக 59,650 ரூபா மாதாந்த கொடுப்பனவுடன் ஒதுக்கப்பட்ட ஒரு வாகனமும் மாதமொன்றுக்கு 115 லீட்டர் எரிபொருளும் வழங்கப்பட்டிருந்ததோடு மீளாய்வு ஆண்டில் மாதாந்தக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு, இணைக்கப்பட்ட சாரதிக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு, இணைந்த படிகளாக 1,684,942 ரூபா செலுத்தப்பட்டிருந்தது. |

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் நிறுவனத்தின் தத்துவங்கள், கருமங்கள் மற்றும் பணிகளுக்கு அமைந்தொழுகாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளைத் தவிர நிறுவனத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுள்ள வகையிலும் உரிய காலப்பகுதிகளில் உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பது.

## 2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2022 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தின்படி ஆரம்பிக்கப்பட்ட 7.5 மில்லியன் தென்னங்கன்றுகள் உற்பத்திக் கருத்திட்டத்திற்காக சபையினால் உறப்பட்ட செலவினம் திறைசேரியிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும் இக்கருத்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தென்னங்கன்றுகளை விற்பனை செய்து பெறப்பட்ட 814,263,729 ரூபா வருமானத்தை பொதுத் திறைசேரிக்கு அனுப்பாமல் சபையின் வருமானமாக கணக்குப் பதியப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் 3 பிரதான பதவிகளான பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளம்), பிரதிப் பொது முகாமையாளர் (நிதி முகாமைத்துவம்) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்தி) ஆகிய பதவிகள் மீளாய்வு ஆண்டின் இறுதியில் வெற்றிடங்களாக காணப்பட்டன. பிரதிப் பொது முகாமையாளர் (நிதி முகாமைத்துவம்) பதவியை 2016 ஆம் ஆண்டு முதல் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் (தென்னைப் பயிர்ச் செய்கை சபை மற்றும் மாதிரி தென்னந்தோப்புகள்) 1,070 இல் 356 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டதோடு தேவையின் பிரகாரம் பிரதான பதவி வெற்றிடங்களை நிரப்பிக்கொள்வதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை திருத்திக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2023 ஆம் ஆண்டில் 77 பதில் கடமை பதவிகளுக்காக 6,783,326 ரூபா செலுத்தப்பட்டிருந்தது.

டப்ளியூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி



*To achieve a high living standard to the coconut producer through increasing the coconut production by means of an effective advisory & extension service and development assistant to increase the productivity of coconut land while meeting the domestic consumer demand and export requirement.*


**Coconut Cultivation Board**

"Kaprukapiyasa"

No. 9/428, Denzil Kobbekaduwa Mawatha,

Battaramulla

011-2861331 / 011-5635623

www.coconutsrilanka.lk